* வாளிகள்
* கிடாரங்கள்
* சட்டிகள்
* கூடைகள்
* பாக்ஸ்
* பாத்திரவகைகளையும்

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

RAJAH Trade Centre
3, Stanley Road, JAFFNA.



பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50



வார்ப்பு, பிளாஸ்ரிக், அல்மேனியம், எனமல் செரமிக் பான்ஸி குட்ஸ் பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

ராஜா ரேட் சென்ரர்
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



சுடர்: 4 சுக்கில ஸ்ரீ வைகாசி மீ 25 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஃதா பிறை 2 (07 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 155


## ● இப்படியும் சுவரொட்டி!

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு பல்கலைக் கழக மான்ய ஆணைக்குழு அலுவலகத்தில் 'வேலைக்கு வந்தால் மரணதண்டனை' எனக் கூறும் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளதாம்.

கடந்த வியாழக்கிழமை இச் சுவரொட்டியைப் பார்த்த ஊழியர்கள் வெள்ளிக்கிழமை முதல் வேலைக்குச் செல்லவில்லையாம். (ஓ-5]

# அமைதிப்படை வாபஸ்: பேச்சு நடத்த இணக்கம்

## இந்திய அதிகாரி நேற்றுத் தகவல்

புதுடில்லி, ஜூன் 7

**இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைதிப்படையை வாபஸ் வாங்குவது பற்றி பேச்சுக்களை நடத்துவதற்கு இலங்கையும் இந்தியாவும் சம்மதித்து உள்ளன.**

**புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இதனை நேற்றுத் தெரிவித்தார்.**

இலங்கையின் வெளியுறவுச் செயலாளர் பேர்னுட் திலகரத்தின பிரதமர் காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்களை கடந்த திங்கட்கிழமை நடத்தினர்.

நேற்று வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவையும் திரு. திலகரத்தின சந்தித்தார்.

இப்பேச்சுக்கள் சம்பந்தமாகக் கருத்து வெளியிடுகையிலேயே புதுடில்லியில் அரசு அதிகாரி முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

விரைவில் அமைதிப்படையை வாபஸ் வாங்குவது என்ற தனது முந்திய நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர், இலங்கைச் செயலாளரிடம் வற்புறுத்தினர் என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னர். (அ-எ)

## ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சம்மாந்துறை சென்றனர்!

கொழும்பு, ஜூன் 7

சம்மாந்துறைக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினரை அனுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கேந்திர நிலையங்களில் தற்போது அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரை சேவையில் ஈடுபடுத்துவதில் சில சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதால் குறிப்பிட்ட எண்ணிக்கையினரே அங்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றனர். (ஓ-எ)

## டென்மார்க் அறிஞர் நடத்தும் தமிழர் பற்றிய ஆய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

இந்து மத வழிபாடு, தென் இந்திய வரலாறு, தமிழ் மக்களின் நிலைமை ஆகிய விடயங்கள் குறித்து டென்மார்க்கில் உள்ள லாஸ் கெயர்ஹோல் என்பவர் ஆய்வுகள் மேற்கொண்டு நூல்களை வெளியிடுகிறார்.

டென்மார்க்கு விஜயம் செய்த யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் கா. சிவத்தம்பி இவரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்து கட்டுரைகளை அனுப்பித் தமது ஆய்வுக்கு உதவும்படி அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

''தமிழ் அறிமுகம்'' என்னும் தலைப்பில் டெனிஸ் மொழியில் அவர் ஒரு நூலை வெளியிட்டுள்ளார்.

இவர் மேலும் பல்வகைப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளவிருக்கிறார். (ஓ-3-10]

## ஆசிரியர் பதவிக்கு இனி உயர் கல்வி அமைச்சில் பதிவு செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வேலையற்று இருக்கும் பட்டதாரிகள், ஆசிரியர் தொழில் பெற விரும்பினால் முதலில் உயர்கல்வி அமைச்சில் பதிவுசெய்யவேண்டும்.

இந்தப் புதிய நடைமுறை தற்சமயம் அமுல்செய்யப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள கலை, விஞ்ஞானப் பட்டதாரிகள் முன்பு போல் இளைஞர் வேலைவாய்

[8ஆம் பக்கம் பார்க்க]

## செய்திச் சாரம்

### கொக்குவில் மஞ்சவனப்பதி கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கொக்குவில் மஞ்சவனப்பதி ஸ்ரீமுருகன் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று காலை 10-55 மணிமுதல் 11.45 மணி வரையில் வரும் சுபவேளையில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மகா அபிஷேகம் நடைபெற்று முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். மாலை வள்ளிதேவசேன சமேதராக சுப்ரமண்யப் பெருமான் திருவீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும்.

[5ஆம் பக்கத்தில் சிறப்பிதழ்]. [ஒ]

### ஒலிபெருக்கி அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 7

கோமாரி தடுப்பு ஊசி ஏற்றும்படி கோரி ஒலிபெருக்கி மூலம் நேற்று யாழ்ப்பாண நகரப் பகுதியில் அறிவிக்கப்பட்டது.

கோமாரி நோய் முற்றாக ஒழிக்கப்படவில்லை என்பதால் கால்நடைகளுக்குத் தடுப்பூசி ஏற்றும்படி ஒலிபெருக்கிமூலம் அறிவுறுத்தப்பட்டது, (ஓ-3]

### முல்லைத்தீவில் ஷெல் வீச்சு!

முல்லைத்திவு தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் துப்பாக்கி வேட்டுக்களும் ஷெல் வீச்சுச் சத்தங்களும் கேட்டன! சேத விவரம் தெரியவரவில்லை.

அதே இரவு வட்டுவாகல் பகுதியிலும் வேட்டுச் ஷெல் வீச்சுச் சத்தங்களும் கேட்டன. இதனால் மக்கள் பீதியுற்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு வாடி வீட்டில் முகாமிட்டிருந்த படையினர் வெளியேறி விட்டனர். (ஓ-92)

### 200 சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஜூன் 7

வெள்ளம், மண்சரிவு காரணமாக தென்னிலங்கையில் 300 க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். சுமார் 200 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

2 லட்சம் பேர்வரை அகதிகளாகி உள்ளனர்.

கொழும்பு விமானப்படை தலைமை அலுவலகத்தில் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அகதிகளுக்கு உதவுவோர் இந்த அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-1)

### கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு பௌசர்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கிளிநொச்சி வைத்தியசாலையில் ஏற்படும் தண்ணீர் பற்றுக்குறையை நிவர்த்தி செய்வதற்காக புதிய தண்ணீர் பௌசர் ஒன்று சுகாதார அமைச்சினால் வழங்கப்படவுள்ளது.

அடுத்த வார முற்பகுதியில் பௌசர் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ·10]

## இந்தியப்படை வாபஸ் குறித்து கருணாநிதி கருத்து

சென்னை, ஜூன் 7

ஜனாதிபதி பிரேமதாசாவின் அமைதிப்படையைத் திரும்பப்பெறும் கோரிக்கைபற்றி தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி கருத்து வெளியிட்டார்.

இலங்கையின் பிந்திய நிலைமைபற்றி செய்தியாளர்கள் முதலமைச்சரைக் கேட்டனர்.

அப்போது கலைஞர் சொன்னதாவது:

ஈழத் தமிழர் பிரச்சினையை இந்திய அரசு கையாண்டுவந்த விதத்தினால் ஏற்பட்ட விளைவுதான் ஜனாதிபதி பிரேமதாசாவின் கோரிக்கை.

முதலமைச்சராக வந்தபின்னர் நான் நான்குமுறை பிரதமர் காந்தியைச் சந்தித்தேன்.

பேச்சுக்கள்மூலம் தமிழர் பிரச்சினைக்கு முறையான தீர்வு காணவேண்டுமென்று அப்போதெல்லாம் பிரதமரிடம் நான் எடுத்துச் சொன்னேன்.

அப்படியான பேச்சுக்கள் நடத்த உகந்த சூழ்நிலை வந்துகொண்டிருந்தபோது பிரதமரின் அலுவலகத்திலிருந்து அப்பேச்சுக்கள் தொடர்பான ஒன்றையும் நான் அறிய முடியாது போய்விட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் - இலங்கை அரசுப் பேச்சுக்கள் ஆரம்பமானபோது, அது வெற்றிஅடைந்தால் மகிழ்ச்சி அடைவேன் என்று பிரதமர் காந்தி சொன்னார். பிரதமர் காந்தியின் இந்த விருப்பம் தான் எனது விருப்பமும் ஆகும்.

இப்படிச் சொன்னர் திரு, கருணாநிதி. [அ-எ]

சுபநேரம்
07— 06 —1989
வைகாசி — 25
புதன்கிழமை

சுபநேரம்:
04.22 முதல் 05.52 வரை
ராகுகாலம்:
11.52 முதல் 01.22 வரை
சதுர்த்தி விரதம்

## புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் நேற்று ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜூன் 7

புத்தூர், ஆவரங்கால் அச்சுவேலி ஆகிய பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அதனால் பருத்தித்துறைக்கான போக்குவரத்துக்கள் நேற்று ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. ஹர்த்தால் காரணமாக போக்குவரத்துக்கள் நேற்றுக்காலையில்வயாவிளான் ஊடாக நடைபெற்றன.

ஆயினும் காலை 9 மணியின் பின்னர் இந்தப் பாதையூடான போக்குவரத்துக்களும் அனுமதிக்கப்படவில்லை.

நேற்று மாலையில் ஒரு பஸ் மட்டும் தொண்டமனாறு காங்கேசன்துறை ஊடாக யாழ் நகர் வந்துசேர்ந்தது.

கடந்த திங்கட்கிழமை புத்

[8 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



டென்மார்க் அறிஞருக்கு எல்லாரும் உதவினால் நல்லாயிருக்கும் பாருங்கோ...!

## நாளை வேலைக்குத் திரும்புவர்

கொழும்பு. ஜூன் 7

பல்கலைக் கழக ஊழியர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது. அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பணிபுரியும் ஊழியர்கள் நாளை வியாழக்கிழமை வேலைக்குத் திரும்புவர்.

உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் நேற்று மாலை கூட்டிய மாநாட்டில் வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதற்கு அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.

பிரஸ்தாப சமரச மாநாட்டில் உயர்கல்வி அமைச்சு அதிகாரிகள், பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு அதிகாரிகள், பல்கலைக்கழக உபவேந்தர்கள், அ. ப. ஊ. சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## என்ன வந்தாலும் திரும்பிச் செல்ல வேண்டும்

### பிரேமா வலியுறுத்துகிறார்

கொழும்பு, ஜூன் 7

என்னதான் கஷ்டம் வந்தாலும் சரி, அமைதிப்படை திரும்பிச் செல்ல வேண்டும்- என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நேற்று வலியுறுத்தினார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு பேசுகையில் அவர் கூறியதாவது:-

அமைதிப்படையை திருப்பி அழைக்கும்படி நான் விடுத்த வேண்டுகோள் இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

வெளியுறவுச் செயலாளர் பேர்னுட் திலகரத்தின இது சம்பந்தமாக எனது கடிதத்தை திரு, காந்தியிடம் கொடுத்துவிட்டார்.

அமைதிப்படை திருப்பி அனுப்பப்பட்டால், அமைதி குலைந்துவிடும் என்று சிலர் சொல்கிறார்கள்.

அமைதிப்படை நாட்டுக்கு வந்து 2 ஆண்டுகளாகி விட்டன. அமைதி திரும்பியதா?

பின்னர் அமைதிப்படை திரும்பியதும் அமைதி குலைந்து விடும் என்று சொல்வதில் அர்த்தம் உள்ளதா?

என்னதான் வந்தாலும் சரி அமைதிப்படை திரும்பிச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நடைபாதை வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் ரத்து

யாழ்ப்பாணம், ஜூன் 7

நடைபாதை வியாபாரிகளுக்கு யாழ். பழைய சந்தைப் பகுதியில் ஒதுக்கப்பட்டிருந்த இடங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் இருந்த நடைபாதை வியாபாரக் கடைகள் நகரின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்ததை அடுத்து பழைய சந்தைப் பகுதிக்கு மாற்றப்பட்டன.

அங்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனி இடங்களும் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டன.

இந்த இடங்களில் கடைகளைத் திறப்பதில் வியாபாரிகள் மத்தியில் ஏற்பட்ட பிணக்குகள் காரணமாக இந்தப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## அமைதிப்படை வெளியேறுவதை எதிர்த்து திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஜூன், 7

இந்திய அமைதிப்படை வெளியேறக் கூடாது என்று கேட்டு பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று திருகோணமலையில் நடைபெற்றது.

காலை 9 மணியளவில் திருகோணமலை சிவன்கோவிலடியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் 11. 00 மணி அளவில் செயலக மண்டப வாசலைச் சென்றடைந்தது.

செயலக மண்டப வாசலில் வைத்து வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளிடம் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ஈ.என்.டி.எல்.எப். இணைந்து இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எப் மாகாண சபைஉறுப்பினர் திரு. ஜோர்ஜ் தவராசா தம்பிராஜா, ஈ.என். டி. என். எல். எப். மாகாண சபை உறுப்பினர் திரு.டேவிட் தயாபரன், மத்திய குழு உறுப்பினர் திரு. வி. ராமதாஸ் ஆகியோர் ஊர்வலத்தை நடத்திச் சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் காரணமாக நேற்று திருகோணமலை நகரம் இரண்டு மணிநேரம் ஸ்தம்பிதம் அடைந்

[8 ஆம் பக்கம் பார்க்க]


உ

திருமண அழைப்பிதழ்

மணமகன்:
செல்வன் செல்வரத்தினம் பார்த்திபன்

மணமகள்:
செல்வி பாலசிங்கம் ஜெயசாந்தி

காலம்: 10. 06. 1989 சனிக்கிழமை
முற்பகல் 10. 30 — மணிமுதல் 12.15 மணி வரை

இடம்: மணமகள் இல்லம்

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி
பொ. செல்வரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியர்)
இல. 2, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

திரு. திருமதி
எஸ். பாலசிங்கம்
இராச வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

இரு வீட்டார் அழைப்பு

(868)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள லம் பிரட்டா (இத்தாலி) ஸ்கூட்டர்கள் உடன் விற்பனைக் குண்டு. எம். எம். ஜெம்ல் ஒஸ்மானியா சந்தி, யாழ்ப் பாணம். (736)

மரம் அரியும் பாட்டுவாள் ஜேதைவாள், மேசைவாள் சகல உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- துரை அரிவு மில், மாத கோவிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (732)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Hisex, Golden comet பிற வுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [549]

**Nallur Farm Centre**

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Prima Broiler குஞ்சுகள் சிவப்பு சேவற் குஞ்சுகள் Golden Comet Hyline பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம் C/o நல்லூர் வீடியோசென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (C/2796)

**புறொயிலர் குஞ்சு விநியோகம்**

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் 08 - 06 - 89 வியாழக்கிழமை விநியோகிக்கப் படும் முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & Bro பிரம்படி லேன், கொக்குவில். [731]

**தேவை**

Honda மோட்டார் சைக்கிள் C B. 90, C. G. 90, C D. 90, C 90 பென்லிசுப்பர் அல்லது இவற்றின் பாவிக்கக் கூடிய என்ஜின்கள் தேவை. விலைவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: கி. அம்பலவாணர் 622, மானிப்பாய் வீதி, யாழ்ப் பாணம். (734)

**மணமகன் தேவை**

38 வயது நிறைந்த O/L சித்தியடைந்த வேளாளர் இனத்தைச் சேர்ந்த மணமகளுக்கு மணமகன் தேவை. போதிய சீதனம் கொடுக்கப் படும், தொடர்பு: சகாயர் திருமண சேவை புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை (11179)

**மணமகள் தேவை**

புலோலி இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பெற்றோர், லண்டன் ஓட்டோ என்ஜினியறிங் சித்தியடைந்து மத்திய கிழக்கில் வேலைசெய்யும்28 வயதுடைய செவ்வாய்க் குற்றமுள்ள மகனுக்கு மணமகள் தேடுகின்றனர். முழு விபரங்களுடன் விண்ணப்பிக் கவும். 539, C/o உதயன், யாழ்ப்பாணம். (735)

**மனைப்பொருளியல்**

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 09-06 89 இல் நடைபெற இருந்த சேவைக்காலப் பயிற்சி வகுப்பு 12-06-89 இல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன். முன் அறிவித்தலின் படி யாவும் கொண்டு வரவும். இ. சண்முகரத்தினம் கல்வி அதிகாரி, மனைப்பொருளியல். (11177)

**SAAI RAAM**

பாவித்த அலுமாரி, சோகேஸ், சாப்பாட்டுமேசை, செற்றி, T. V, 17" Rice Cookers Fridge, Cycle, National Two in one 5030 SaaiRaam, 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (11164)

**சேவை**

சகலவிதமான மின் இணைப்பு வேலைகளும் பைப்வேலைகளும் மற்றும் சகலவிதமான காஸ் குக்கர்களும் திருத்திக் கொடுக்கப்படும் Fakhry Works 72/2 கஸ்தூரியார் வீதி, (ராஜா தியேட்டர் முன்பாக) யாழ்ப் பாணம். (728)

## மேற்கு ஜேர்மன் பிரயாண ஒழுங்குகள்

உடனடியாகக் கீழ்க் காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

எவ்வித சிரமமும் இன்றி கூடிய சீக்கிரம் அனுப்பிவைக்கப்படும்.

**சந்திக்கும் நேரம்**

காலை: 9 மணி — 12 மணி
மாலை: 2 மணி — 4 மணி

முகவரி:

**K. S. RAVI**
**HOTEL ANNAKKILI,**
**331, MAIN STREET,**
**JAFFNA.**

(11180)

## மின்தறி நெசவாளர்கள் தேவை

மேற்கூறிய பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையில் அதிகூடிய ஊதியம் நிர்ணயிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 08 – 06 – 89 முதல் 16-06-89 வரை காரியாலய நாட்களில் காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை தங்களது அத்தாட்சி, நற்சாட்சிப் பத்திரங்களுடன் சமுகமளிக் கும்படி கேட்கப்படுகிறீர்கள்.

விலாசம்:-

Sri Rams Textile Processing Co - Ltd.,
KONDAVIL ROAD,
IRUPALAI,
KOPAY. (11173)

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரைவுள்ளது

## பதவி வெற்றிடம்

### விற்பனை உதவியாளர்

எமது சங்கத்தில் ஏற்பட்டிருக்கும் விற்பனை உதவியாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகைமையுடைய இலங்கைப்பிரஜை ஆண்பாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி:**
**19 - 06 - 1989 நண்பகல் 12. 00 மணி வரை**

**பதவி:** விற்பனை உதவியாளர்
(308 17 கூ. வே. ஆணைக்குழு சு. நி. இல. 165 / 88 – 308. 15)

**சம்பள அளவுத்திட்டம்:**
685 — 860
10 10 — 15 5
அத்துடன் கூ. வே. ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட விசேட படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

**வயது எல்லை:**
23 — 35 வரை

**வசிப்பிடத் தகைமைகள்:**
குறைந்தது 02வருடமாவது சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவராக இருத்தல்.

**பிணைப் பணம்:**
உரொக்கம் ரூபா 1000/-
பதவி கிடைத்தவுடன் பிணைப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

**கல்வி மற்றும் தகைமைகள்:**
கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரப் பத்திரம்
அல்லது
8 ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனையாளராகக் கடமையாற்றிய 3 வருடங் களுக்குக் குறையாத அனுபவமும்.

**குறிப்பு:**

1. விண்ணப்பங்கள் யாவும், எமது காரியாலயத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பப் பத்திரங்களில் மாத்திரம் நிரப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.
2. சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன் உரிமை வழங்கப்படும்.
3. கல்விச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ்பிரதிகளும், வசிப்பிடத் தகைமை பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவின், அந்தவிளக்கம்குறித்து அத்தாட்சிப்படுத்தும் கடிதமும், நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும் குறிப்பிட்டபடி நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப் படல் வேண்டும்.
4. விண்ணப்பப் படிவக் கடித இடது பக்க மேலுறையில் "விற்பனை உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிடையாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்.**

யாழ். ப. நோ. கூ. சங்கம்,
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
5. 6. 1989 (சி/2819)

# மதிய உணவுத்திட்டம் மூலம் பாடசாலை இடைவிலகல் குறையும்

## வேம்படி மகளிர் கல்லூரியில் மதிய உணவை ஆரம்பித்து உரை

மதிய உணவுத்திட்டத்தின் மூலம் பாடசாலை இடைவிலகல் குறையும்

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற மதிய உணவுத்திட்ட ஆரம்ப வைபவத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் செல்வி இ. இராஜரத்தினம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தை முன்னாள் அதிபர் திருமதி எஸ். இராஜரத்தினம் மாணவர்களுக்கு உணவு வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

பேராசிரியர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மதிய உணவுத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் மத்தியில் காணப்படும்போஷாக்கின்மை குறைக்கப்படும். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது ஆரம்பகாலங்களில் ஏற்படக்கூடிய சில குறைபாடுகளைப் பெரிதுபடுத்தாது இத் திட்டம் இலக்கை அடைய சகலரும் உதவ வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

அதிபர் தன் உரையில் கூறியதாவது;

அரசாங்கம் இலவசக்கல்வி இலவச பாடப்புத்தகம் என்று அமுல் செய்த திட்டங்கள் வெற்றி பெற்றது போன்று இம்மதிய போசனத் திட்டமும் வெற்றியடைய சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## கைதடி மகாவிஷ்ணு வினா. போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். கைதடி நாவற்குழி மகாவிஷ்ணு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு வே. இராமர் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்ப்பாணக் கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் பிரதமவிருந்தினராகவும், கொத்தணி அதிபர் திரு. சோ. கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (க)

## காசிப்பிள்ளை வித்தியாலய இல்லப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 07

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை காலை 9.00மணிக்கு பாடசாலையின் சுமதி - தாரணி அரங்கில் இடம்பெறும். (இ)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இல்லம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

லண்டனில் உள்ள விம்பிள்டன் கணபதி ஆலய பிரதம நிர்வாகி திரு. ஏ. ரி. எஸ். இரத்தினசிங்கம் பருத்தித்துறையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்காக பளையில் 45 ஏக்கர் கொண்ட ஒரு தென்னந் தோட்டத்தை வாங்கியுள்ளார்.

இத் தோட்டத்தில் விம்பிள்டன் கணபதிகோயிலின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒரு இல்லத்தை அமைக்க ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் தீர்மானித்துள்ளது. (ச)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:
21- 06- 1971

மறைவு:
20 - 05- 1988

திதி: 07, 06: 1989
புதன்கிழமை



### செல்வன் துரைசிங்கம் ஸ்ரீதரன்
(ஜெயம் கண்ணன்)

கல்விக்கு ஒரு வித்தகனாய், வீரத்திற்கு ஒரு மாவீரனாய், குடும்பத்திற்கு ஒரு குலவிளக்காய், நண்பர்களுக்கு ஒரு நல்ல நண்பனாய் இருந்து எல்லார் மனதையும் தவிக்க விட்டுச் சென்று விட்டீரே!

உமதுஆத்மா சாந்தியடைய நெடியகாட்டுப்பிள்ளையாரை வேண்டிக் கொள்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
**திரு. திருமதி சி.துரைசிங்கம் குடும்பத்தினர்**

மாணுங்கானை,
வல்வெட்டித்துறை. (11183)

## ஆசிரியர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 7

பொல்கம் பொல என்னும் இடத்தில் சங்கீத ஆசிரியர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

ஜெயசிரி விஜயகுணவர்த்தன இரண்டு குழந்தைகளின் தந்தை ஆவார்.

இதேவேளை பதுரளிய என்னுமிடத்தில் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். [ஓ-ஏ]

## Diploma In Home Management

6 MONTHS
வாரநாள் வகுப்புகள்

| | |
|---|---|
| DRESS MAKING | CAKE ICING |
| FLOWER MAKING | HANDIYCRAFT |
| KOLAM | TOY MAKING |
| COOKERY | HAIR STYLING |

GLASS & FABRIC PRINTING
BATIK AND TIE & DYE MANAGEMENT
USE & MAINTENANCE OF HOME APPLIANCE
FIRST AID POISE AND ETIQUETTE

**FEES: Rs. 125 per month**

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்,
ஆரம்பம்: 16 - 06 - 1989

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION,**
16, 3rd CROSS STREET,
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
JAFFNA. (C/2817)

## PERSONAL CLASSES

B. M. C. முன்லேன்-யாழ்ப்பாணம்,

### A/L 90 புதிய பிரிவு

**ஆரம்பம்: 10 - 06 - 89**
சனி காலை 8.30 மணி

8.30 a.m. Chemistry — திரு. மதுரமணி B. Sc
● பௌதிக இரசாயனம்

9.30 a.m. Physics — திரு. சத்தியசீலன் B. Sc
● வெப்பவியல்

10.30 a.m. Zoology — திரு. சஸ்வரதாசன் B. Sc
● வன்கூடு

11.30 a.m Botany — திரு. சர்வானந்தா B. Sc
● இயங்குதாவரம்

12.30 p.m. Pure & Applied Maths — திரு. விஜயகுமார் B. Sc
● வரிசைமாற்றமும் சேர்மானமும்

● A/L 89 Paper Classes and Day Classes
A/L 91 Week end Classes
நடைபெறுகின்றன. [சி-2813]

உ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு காசிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

படைப்பு: 10-03-1914 — இறப்பு: 19-05-1988

திதி: 07- 06- 1989 புதன்கிழமை

**அன்புத் தெய்வமே!**

எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு எம்மைப் பிரிந்து வருடங்கள் ஒன்றுகிலும் உங்கள் நினைவு எம் மனதை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

உடுப்பிட்டி வீதி,
மாலிசந்தி,
கரவெட்டி. [11182]

உ

## ஸ்ரீ ராகவேந்திரர் ஆலயம் ம்ருதிக்கா

(ஸ்நபன அபிஷேகமும் பிரதிஷ்டையும்)

**அன்புடையீர்!**

159A கோவில் வீதி நல்லூரில் அமைந்திருக்கும் ஸ்ரீ கோபி கிருஷ்ணன் ஆலயத்தில் ஸ்ரீ மாஞ்சாம் புவனேஸ்வரியும்
ஸ்ரீ ராகவேந்திரர்
ஸ்வாமியும் விக்கிரகப் பிரதிஷ்டை செய்யத் திருவருள் கைகூடியுள்ளது.

**நிகழும் 8-6-1989 வியாழக்கிழமை காலை 7.22 மணிமுதல் 8.22 மணி வரையுள்ள சுபவேளையில்**

**பிரதிஷ்டா கும்பாபிஷேகம்**
இடம் பெறும்.

அன்பர்கள் 7ஆம் திகதி புதன்கிழமை பால், தேன், நெய், இளநீர், கற்கண்டு, சர்க்கரை, தயிர், பழவகைகள் முதலியவற்றை ஆலயத்தில் சமர்ப்பிக்கவும்.

★ **முக்கிய குறிப்பு:**
சிறந்த சித்த வைத்தியர்களினால் தயாரிக்கப்பெற்ற லேகியங்களும், சூரணங்களும் ராகவேந்திரர் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். இஃது நரம்புத் தளர்ச்சி, நீரிழிவு நோய்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

[11186]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மணே நம

## திறப்புவிழா அழைப்பிதழ்

## ரகு போட்டோ டெக்னிக்
(Ragu Photo Technic & Camera Repairs Work Shop)

காலம்:- சுக்கில ஆண்டு வைகாசித் திங்கள் 25 ஆம் நாள் (07. 06. 89) புதன்கிழமை காலை 9. 30 மணி முதல் 10- 18 மணிவரை வரும் கடகலக்கின சுபவேளை.

இடம்:- 301, (மேல்மாடி) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கன்னாதிட்டிச் சந்திக்கு அருகாமையில்)

தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் திறப்புவிழாவில் கலந்து நல்லாசிகூறிச் சிறப்பிக்கும் வண்ணம்
★ அன்புடன் அழைக்கின்றோம் ★

இங்ஙனம்
நா. சு. நாராயணசாமி தம்பதியர்

187/6, இல்வர் லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(11137)



## ★ ஹொங்கொங் ★

### நாட்டிற்கான உடனடி வேலை வாய்ப்புக்கள்

1. தச்சுத் தொழிலாளர்
2. மேசன்
3. லேபரர்
4. கம்பி வளைப்பவர்
5. பிளம்பர்
6. பெயின்ரர்
7. எலக்றிசியன்
8. பிளான்ட் ஒப்பறேற்றர்
9. கனரக சாரதி
10. மெக்கானிக்

சம்பள அளவுத் திட்டம் 16,000 -- 36,000 வரை
[தொழிற் சந்தோரினூடான வேலை வாய்ப்பு]

### ★ சவூதி ★

ஏயார் போட் கிளினேர்ஸ் — 450 றியால்
கொஸ்பிட்டல் கிளினேர்ஸ் — 450 றியால்

மேலதிக விபரங்களுக்கு:

## மியூனிஸ்ட் என்ரபிறைசஸ்,
156, 1 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் பாடசாலை முன்பாக)
[சி-2688]


# பூநகரி உ. அ. அதிபர் பிரிவில் மிளகாய்ச் செய்கை ஊக்குவிப்பு

## 1,200 விவசாயிகள் பயன் பெறுவர்

யாழ்ப்பாணம், ஜூன் 7
கிளிநொச்சி, பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு மிளகாய்ச் செய்கைக்கு 1 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் ஒரு திட்டத்தை கெயர் இன்ரநஷனல் அமைப்பு நடைமுறைப் படுத்தியுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் மிளகாய்ச் செய்கைக்கு ஊக்கம் அளிக்கப் படும்.

மிளகாய்ச் செய்கையை விருத்தி செய்யும் நோக்குடன் மேற்படி அமைப்பு கிளிநொச்சி, பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆயிரத்து 200 விவசாயிகளை தெரிவு செய்து அவர்களுக்கு மிளகாய்ப் பயிருக்கு உரிய உரம், மருந்து வகைகள் ஆகியவற்றை வழங்கியது.

அத்துடன் அவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கியது.

விவசாயிகள் செய்கை செய்த மிளகாயை சந்தைப் படுத்தலில் இருந்து வந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் மேற்படி அமைப்பு தெல்லிப்பளை உட்பட பல ப. நோ. கூ. சங்கங்களுக்கு விவசாயிகளின் மிளகாயை வழங்கியது. (ஒ-3)

## காரைதீவுச் சந்தியில் கூட்டாகச் சோதனை

அம்பாறை, ஜூன் 7
கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியின் காரைதீவுச் சந்தியில் புதிதாக இந்திய அமைதிப்படையினரும், இலங்கைப் பொலீஸாரும் கூட்டாக சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரயாணிகள் வான்களிலிருந்து இறக்கப்பட்டு சுமார் ஐம்பது யார் தூரம் நடந்து சென்றே மீண்டும் வான்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

பரிசோதனை என்ற நோக்கில் அழுத்தமான சோதனைகள் எதுவும் நடைபெறுவதில்லையெனினும் பிரயாணிகள் வான்களிலிருந்து இறக்கப்பட்டு வெய்யிலில் நடந்து செல்லப் பணிக்கப்படும் செயல் பெரும் உபத்திரவமாக இருக்கின்றதெனப் பலரும் சலித்துக் கொள்கின்றனர். (க-14)

## மீளக் குடியமர்ந்தவர்களுக்கு 6 மாதங்களுக்கு இலவச உணவு

ஒட்டுசுட்டான், ஜூன் 7
ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் குடும்பப் பதிவு அட்டைகள் வழங்கப்பட்ட மீளக் குடியமர்வுப்படி பெறுவதற்கு உரித்துள்ள குடும்பங்களுக்கு 6 மாதங்களுக்கு இலவச உணவுப் பொருளகள் வழங்கப் படும்.

புனர்வாழ்வு புனர்நிர்மான அமைச்சின் செயலாளர் இதனை அங்கீகரித்துள்ளார் என முல்லைத்தீவு அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

★ இலவச உணவு வழங்கப்பட இருக்கும் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு விசேஷ வரட்சி நிவாரண முத்திரை வழங்கப்படமாட்டாது.

மீளக்குடிஅமர்ந்த சில குடும்பங்களில் ஏற்கனவே 6 மாதங்களுக்கு இலவச உணவுப் பொருள்கள் பெற்றவர்களுக்கு மீண்டும் இலவச உணவுப் பொருள்கள் வழங்கப் படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-113)

## தொழிற்பயிற்சி நிலையம்

சாவகச்சேரி தென் இந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் ஆதரவில் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. ஆங்கிலமொழி, தமிழ், ஆங்கிலத் தட்டச்சு சுருக்கெழுத்து, தையல், மனையியல் வகுப்புக்கள் இங்கு நடைபெறும்.

இந்த நிலையத்தை திருச்சபையைச் சேர்ந்த பாற்றின் கன்ட் திறந்து வைத்தார். (க - 31)

## கிளைக்குழுத் தேர்தல்

நெடுந்தீவு, ஜூன் 7
நெடுந்தீவு பல நோ. கூ. சங்கக் கிளைக் குழுக்கான தேர்தல்கள் ஜூன் மாதம் 24 ஆம் திகதி நடைபெறும்.

கிளைக்குழுக்களுக்கான நியமனப்பத்திரங்கள் இம் மாதம் 17 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (க-111)

## சயரோக தடுப்புப் பயிற்சி

வட்டக்கச்சி, ஜூன் 07
சயரோகத் தடுப்புப் பற்றிய பயிற்சிவிளக்கப் பயிற்சிவகுப்பு ஒன்று கடந்த மாத நடுப் பகுதியில் கொழும்பு சயரோகத் தடுப்பு அத்தியட்சகர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் வடபகுதியில் இருந்து 4 தமிழ் டாக்டர்கள் உட்பட 30 டாக்டர்கள் கலந்து கொண்டார்கள்.

கிளிநொச்சி வைத்தியசாலை டாக்டர் எம். சந்திரசேகரம், பளை வைத்தியசாலை டாக்டர் எஸ். நல்லைநாதன், சாவகச்சேரி வைத்தியசாலை டாக்டர் திருமதி எஸ். இரத்தினம், புங்குடுதீவு வைத்தியசாலை டாக்டர் தங்கவேலு ஆகியோரே வடபகுதி டாக்டர்கள் ஆவர். (க-133)

## தள்ளாத வயதினிலும் சமயத் தொண்டு புரிபவர்

### நூலாசிரியருக்குப் பாராட்டு

மானிப்பாய் ஜூன் 7
'பிரபந்தங்கள்' என்ற நூலை எழுதிய ஆசிரியர் கதிர்காமநாதன் சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் சேவை புரிந்து வருகின்றார். தள்ளாத வயதிலும் இதுபோன்ற நல்ல கருமங்களில் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது போற்றுதலுக்கு உரியது.'

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கல்யாண மண்டபத்தில் திரு. வை. அ. கதிர்காமநாதன் எழுதிய 'பிரபந்தங்கள்' நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்து நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றிய போது நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்ய ஸ்வாமிகள் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கதிர்காமநாதனுக்கு மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா பொன்னாடை போர்த்தி அவரைக் கௌரவித்தார்.

திருவாளர்கள் அ. இராசநாயகம், சு. பொ. நடராஜா (அண்ணா தொழிலக அதிபர்), எஸ். தங்கராசா, து. சிவராசா (லிங்கம் ஸ்ரோர்ஸ் அதிபர்) ஆகியோர் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள்.

வைத்திய கலாநிதி, வித்துவான் திரு. சி. நா. கணேச பண்டிதர், திரு. கதிர்காமநாதனின் சேவையைப் பாராட்டி 'சிவநெறிப்பாவலர்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ எஸ். வீரமணி ஐயர் தமது குருவான திரு. கதிர்காமநாதனுக்கு பொன்னாடை போர்த்தி, குருதட்சணை வழங்கி மரியாதை செலுத்தினர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட சங்கீத வித்துவான் திரு. ஸ்ரீ. ந. வி. மு. நவரத்தினம், இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலய சங்கீத ஆசிரியை திருமதி க. ஆனந்தக்குமாரசாமி ஆகியோர் பிரபந்தப் பாடல்களைப் பாடினர்.

பல்கலைப் புலவர் திரு. க. சி. குலரத்தினம், வித்துவான் சி. நா. கணேச பண்டிதர், திரு. கே. எஸ். ஆனந்தர், பண்டிதர் இராசையா ஆகியோரும் சிறப்புரைகள் வழங்கினார்கள். (க-90)

## சித்தாந்த வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7
நல்லை திருஞானசம்பந்தர் ஆதின சைவ சித்தாந்தக் கல்லூரியின் முதலாவது சித்தாந்த வகுப்பு ஜூன் 4 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்குஆரம்பமாயது.

சிவஞானபோதம் சிவஞான சித்தியாரை உள்ளடக்கிய 14 சித்தாந்த சாத்திரங்களும் திருமுறைகளும் அடங்கிய பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்பவர்களுக்கு சித்தாந்த வித்துவான் பட்டம் வழங்கப் படும்.

சித்தாந்த சைவ ஆசிரியர் சான்றிதழ் வகுப்பும் இடம் பெறும். பயிற்சிகள் யாவும் இலவசமே. (க)

## மதிய போசனம்

திரு இருதயக்கல்லூரியில் மதிய உணவுவழங்கும் வைபவம் ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு. சி. வின்சன் இதனை ஆரம்பித்து வைத்தார். (க-70)


உ

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!
நிகழும் சுக்கில வருடம் வைகாசித் திங்கள் 28 ஆம் நாள் (10 - 6 - 89) சனிக்கிழமை காலை மணி 8. 30 — 9. 30 க்கும் இடையில் வரும் சுபமுகூர்த்தத்தில்

எங்கள் மகன் **திருக்கேதீஸ்வரன்** அவர்களுக்கும்
எங்கள் மகள் **மாலதி** அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண விழாவில் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் அன்புள்ள

டாக்டர் எஸ். அருணாசலம்
(கண் சத்திர சிகிச்சை நிபுணர்)
திருமதி எஸ். அருணாசலம்
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

திரு. ஆர். சிவகுருநாதன்
(பிரதம ஆசிரியர் - தினகரன்)
திருமதி. ஆர். சிவகுருநாதன்
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(சி/2690)



## விவசாயிகளே!

● களைகள் முளைக்குமுன் அழிக்க வல்ல
● பரந்த செயற்பாடுடைய ஒரே களை நாசினி

# லஸ்சோ

[அலக்குளோர் - Alachlor]

நாற்று நடப்பட்ட
மிளகாய்க்கன்றுகள்
வெங்காயம்
நிலக்கடலை
சோயா அவரை
பாசிப்பயறு
கௌபீ
ஆகிய பயிர்களுக்கு

LANKEM
ලංකෙම් லங்கெம்

விவசாயத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது

### லங்கெம் விவசாயிகளின் தோழன்

சில்லறை விலைகள்: 400 மி.லீ- ரூபா 135.00
200 மி.லீ- ரூபா 75.00

வட மாகாண விநியோகஸ்தர்கள்:

(1) V. வடிவேல்
219, 221, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(2) புஸ்பா அன் கோ
128 B, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(3) வி. கே. வி' ஸ் ஸ்டோர்ஸ்
353, கண்டி வீதி,
கிளிநொச்சி.

(4) பிள்ளையார் ஸ்டோர்ஸ்
மல்லாவி,
யோகபுரம்.

[சி-2649]



## சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

## "அர்ச்சுனா" - ஏப்ரல் இதழ்




● மாத இதழ் ரூபா 4 00 ● ஆண்டுச் சந்தா ரூபா 55. 00

காசோலை அல்லது காசுக்கட்டளை "நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என்று எழுதப்பட்டு அர்ச்சுனா, த. பெ. எண் 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

[சி-2804]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார்கட்டு தண்ணீர் திட்டம் பூர்த்தியாகும் கட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 07 யாழ்-மாநகர சபையின ரால் யுனிசெப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நாயன்மார்கட்டு குடிதண்ணீர் திட்டம் ஒரு மாத காலத்தில் பூர்த்தியாக உள்ளது.

இத் திட்டத்தை செய்து வந்த தனியார் நிறுவனம் ஒன்று சகல வேலைகளையும் முடித்துள்ளபோதும் மோட்டார் இயந்திரம் பொருத்துவதில் தாமதம் இருந்து வந்தது.

ஒரு மாத காலத்தில் இயந்திரம் பொருத்தப்பட்டு மாநகரசபையிடம் ஒப்படைக்கப்படும். (ஒ-3)

## பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

பண்டத்தரிப்புப் பகுதியில் வயல் வெளியில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

பரமசாமி கோடீஸ்வரி வயது 22 என்னும் இப்பெண் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## வடக்கில் மேசன் பயிற்சிக்கு 'கெயர்இன்ரநஷனல்' திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் வடமாகாணத்தில் மேசன், தச்சுத்தொழில் பயிற்சியை பரவலாக வழங்க ''கெயர் இன்ரநஷனல்'' திட்டம் வகுத்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள வேலையற்ற இளைஞர்களுக்கு மேசன், தச்சுத்தொழில் பயிற்சி அளிக்க மேற்படி அமைப்பு திட்டமிட்டுள்ளது.

மூன்றுமாத கால பயிற்சி அளிக்கவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஒ-3]

## மாணவி பலி

பச்சிலைப்பள்ளி, ஜூன் 7

மணல் ஏற்றிக் கொண்டு சென்ற உழவு இயந்திரத்துக்குப் பின்னால் சென்ற மாணவி சில்லுக்குள் அகப்பட்டு மரணமானார்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த மகேந்திரன் சஷி (வயது 09) என்னும் சிறுமியே பலியானவராவார். (ஓ-117)

## அமைச்சருக்கு மகஜர்

நெடுந்தீவு, ஜூன் 7

நெடுந்தீவு மக்களின் பிரயாணக் கஷ்டங்களை நீக்கக் கூடியதாகப் புதிதாகக் கட்டப்பட்ட படகுகள் இரண்டையும் விரைவில் சேவையில் ஈடுபடுத்துமாறு போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமியிடம் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

''நெடுந்தீவு மக்கள் யாழ் குடாநாட்டுடனான தமது தொடர்புகளுக்கு இந்தப் படகுகளையே எதிர்பார்த்துள்ளனர்.

தற்போது சேவையிலுள்ள ஒரே ஒரு அரச படகும் அடிக்கடி பழுதடைவதால் பொது மக்கள் பாதுகாப்பும் உறுதியும் அற்ற தனியார் படகுகளில் பொதிகளுடன் கஷ்டம் நிறைந்த கடற்பயணத்தை மேற்கொள்கின்றனர்கள்'' என நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்தினர் அமைச்சர் செல்லச்சாமிக்கு அனுப்பிய மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-111)

## தமிழ் இளைஞர் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, ஜூன் 7

45 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை கடத்திச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் வடபகுதி இளைஞர் ஒருவரை கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைதுசெய்தனர்.

நகைகள் பறிமுதல்செய்யப்பட்டன. அந்த நபருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [சி-எ]

பிரதமரின் பாதுகாப்புக்கு பொறுப்பான

# பொலீஸ் அதிபரின் கார் கல்வீசித் தாக்கப்பட்டது

## மாணவர் கோஷ்டி வழி மறித்தது

கொழும்பு, ஜூன் 7

பிரதம மந்திரியின் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளரான சிரேஷ்ட பொலீஸ் அதிபர் சுலைமான் சென்ற காரை மாணவர் கோஷ்டி ஒன்று வழி மறித்தது.

ஜனாப் சுலைமான் சென்ற கார் மாணவர்களினால் கற்களாலும் கம்புகளாலும் தாக்கப்பட்டது.

கண்டியில் கெங்கல்ல என்னுமிடத்தில் கடந்த வியாழக்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றது.

கெங்கல்ல மகாவித்தியாலயத்தைச்சேர்ந்தமாணவர் கோஷ்டியே இத் தாக்குதலை நடத்தியது.

காரின் முன் சக்கரங்களில் இருந்த டயர்களையும் மேலதிக சக்கரத்தையும் மோட்டோரோலா வயர்லஸ் சாதனத்தையும் மாணவர்கள் காரில் இருந்து அகற்றினர்.

இது போன்று மாணவர்கள் வேறு 5 வாகனங்களையும் தாக்கிச் சேதப்படுத்தினர். அவற்றில் ஒன்று பொலீஸ் வழி காட்டிக் கார் ஆகும்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைக் கலைக்க தெல்தெனியா பொலீஸார் விரைந்தனர். பொலீஸாரையும் மாணவர் தாக்கினர். அப்போது இரண்டு கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர்.

வலலா மத்தியக் கல்லூரி மாணவர் ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதை எதிர்த்தே மாணவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-எ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருவல்லிபுரம் மகாலிங்கம்

(BA. L L, B. சட்டத்தரணி, இளைப்பாறிய உப அதிபர், தலைவர், பிரஜைகள் குழு, நெல்லியடி)

பிறப்பு: 11-11-1927    இறப்பு: 08-05-1989

08-05-1989 ஆம் திகதி மாலை 7.00 மணியளவில் அகாலமரணமான எம் குடும்ப தெய்வத்திற்கு எங்களது கண்ணீர் அஞ்சலி என்றும்! என்றும்!!

07-06-1989 புதன்கிழமை நடைபெற இருக்கும் அன்னாரது அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள், உறவினர்கள் அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கன்பொல்லை வீதி,
கரவெட்டி. (862)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### ஆறுமுகம் கணேசலிங்கம்

தோற்றம்: 30 - 03 - 1969    மறைவு: 19 - 05 - 1988

ஆண்டு ஒன்று போனாலும்
அழியாது எம்முடனே
தூண்டாமணி விளக்காய்
தோன்றும் அன்புருவே!
மீண்டும் காண்போமா
மேலான அன்புருவை?
வேண்டுகின்றோம் நின் ஆத்மா
சாந்திபெற பிரார்த்திக்கும்;

அப்பா, அம்மா,
சகோதரர்கள், மச்சான்.

திருநெல்வேலி வடக்கு,
பழங்கிணற்றடி
பிள்ளையார் கோயிலடி, (867)

## நன்றி நவிலல்

18-05-89 இல் நிகழ்ந்த எங்கள் திருமண வைபவத்திற்கு சுற்றம் சூழ வருகை தந்தும் எங்களை மனமார வாழ்த்தியும், அன்பளிப்புகளை வழங்கியும் எங்களை மகிழ்வித்த அனைவருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

ராமு மைத்திலி
தம்பதிகள்.

'மிதிலை'
மாதா கோவில் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (863)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





### இளையதம்பி அருளானந்தம்

(உரிமையாளர் உமா கராஜ், வியாபாரிமூலை)

மலர்வு: 15.08.1943
உதிர்வு: 31.05.1987

### அருளானந்தம் சுதாகர்

(ஹாட்லிக் கல்லூரி ஏ. எல். மாணவன்)

மலர்வு: 23.11.1969
உதிர்வு: 31.05.1987

திதி: 07. 06. 1989

எல்லாம் நீங்களே யாக,
எமக்கு இருந்தீர்; இறைக்கோ
நீதிநில்லார் செயலால் மறைந்திட்டீர்;
புவியில் புகழால் மறையீரே!
எல்லாம் வல்ல அரசடியான்
இணையில் பாதத் தின்புறுக.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்பு
மனைவி பரமேஸ்வரியும்,
பிள்ளைகளும்.

அன்பு
அம்மாவும்,
சகோதரிகளும், தம்பியும்.

''கயிலை''
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(870)

அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான

## S. L. A. S

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை

இப்பரீட்சை ஜூலை மாதம் 29ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளமையால் பலரின் வேண்டுகோளுக்கிணங்க

புதிய விசேட பயிற்சி வகுப்புகள்

(பல தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை)

ஆரம்பம்: 10 — 06 — 89 காலை 9.00 மணி

★ இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் விண்ணப்பிக்கும் வாய்ப்பு.
★ விண்ணப்ப முடிவு திகதி: 23 — 06 — 1989

கிரகித்தல்: நுண்ணறிவு: விடயஆய்வு

★ இலவச பாடக்குறிப்புகள் — ★ கட்டணம்: ரூபா 250. 00
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.

விபரங்களுக்கு:

ASTAN INSTITUTE
166/1 Hospital Road. JAFFNA.

(சி-2807)

"அஸ்தமனத்தில் ஓர் உதயம்"

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ம. அச்சுதன்

மலர்வு: 26-11-1968    உதிர்வு: 31-05-1987


திதி: 07-06-1989

அச்சுதா! நீ
வாழ்ந்தது உண்மையாக
கால வானிலே
கரைந்தது பொய்யாக
என்றும் எம்மோடு
செயல்களால், நினைவுகளால்
காலமெல்லாம் வாழ்கிறாய்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா,
மற்றும் நண்பர்கள்.

'அறந்தாங்கி'
அல்வாய் வடக்கு,
அல்வாய். (869)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் முருகேசு சண்முகரட்ணம்

(தயா)

[சுபமாலா மோட்டஸ் பங்காளர்]

அகிலத்தில்: 03. 06. 1956    அக்கினியில்: 19. 05. 1988

திதி: 07. 06. 1989

நெஞ்சங்களில் நிறைந்த
நினைவு இன்று நீர் விழிகளால்
மறைந்து போகுமா?
உங்கள் புன்சிரிப்பே ஒரு
நினைவலையாய் வந்து
நித்தம் நிற்கும் போது
நீர் விழிகள் மட்டும்
அதனை மறைத்து விடும்
என்பது என்ன நியாயமோ?

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்:

தாய், தகப்பன், மனைவி, பிள்ளைகள்.
மற்றும் அன்பு மாமா,
சகோதர சகோதரிகள்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(11176)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் மஞ்சவனப்பதி முருகப்பெருமான் ஆலய மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர்



மஞ்சவனப்பதியில் வாழும் வரமணியே!
தஞ்சமென நின்பால் சரணடைந்தேன்— செஞ்சொற்
குணபதியே! ஞானக்குருபரனே! செல்வக்
கணபதியே! காப்பாய் கனிந்து

[மஞ்சவனப்பதி முருகன் மீது
திருமுருக கிருபானந்த வாரியார் பாடியது]

## தஞ்சமென வந்தவரை காத்தருளும்

# கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன்

தஞ்சமென வந்தவரைக்
காக்கும்
மஞ்சவனப்பதி முருகன்.

குன்றுதோறாடும் குமரன் கொக்குவில் மஞ்சவனப்பதியில் இன்று குடமுழுக்கு ஆடுகிறான். குமரன் விரும்பி உறையும் இடங்களிலே காடும் ஒன்று. முன்னாளிலே மஞ்ச மருதி காடு எனப் பெயர் பெற்ற இடமே இன்று மஞ்சவனப்பதி தேவஸ்தானமாக விளங்குகின்றது.

மஞ்சு தவழ்கின்ற வானளாவிய மருதமரங்களால் சூழப்பட்ட இப்பதி மஞ்சுகள் மழையைப் பொழிவதனால் மஞ்சு பலியகாடு என்றும் பாமர மக்களால் அழைக்கப் பெற்றது.

பழம்பெருமை மிக்க இப்பதி கி. பி 115ஆம் ஆண்டளவில் தோற்றம் பெற்றது. ஆரம்ப காலத்தில் விநாயகர் ஆலயமாக விளங்கிய இவ்வாலயம் பாதசி முதலிக்குட்டி சண்முகம் என்பவர் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளராக இருந்த காலத்தில் முருகன் கோயிலாகப் பிரபல்யம் அடைந்தது.

இங்கு கந்தபுராணம், பெரிய புராணம், திருச்செந்தூர்ப் புராணம் ஆகியன படிக்கப் பெற்றுப் பொருளும் கூறப்பட்டன. இன்றும் இப்புராணங்களை யேட்டுப் பிரதிகளாக ஆலயத்தில் பூசிக்கப்பெற்று வருகின்ற சம்பிரதாயம் இவ் ஆலயத்தின் தொன்மையை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

1817ஆம் ஆண்டு வரை மடாலயமாக இருந்த கோயில் ஆகம முறைப்படி கற்கோயிலாக அமைக்கப்பெற்று அதி விமரிசையாகக் கும்பாபிஷேகமும் நிகழ்த்தப் பெற்றது.

இக்காலத்திலேதான் ஆதி மூலத்தில் வள்ளி - தேவசேனா சமேதராய் முருகப்பெருமான் கருங்கல்லாலான சிலா மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப் பெற்றார்.

ஆலயத்தின் நித்திய நைமித்திய பூசைகளை பிரம்ம ஸ்ரீ சின்னப்பா ஐயர் செய்துவந்தார்.

### திருப்பணி வேலைகள்

நீர்வேலி சிவ ஸ்ரீ நீலகண்ட குருக்கள் கும்பாபிஷேகம் செய்து ஆலயத்தை அருள் மிகு தேவஸ்தானமாக மிளிரச் செய்தார். ஆண்டுதோறும் புராணபடனம் நடைபெற்று வந்தமைபோலத் திருப்பணி வேலைகளும் சிறிது சிறிதாக நடைபெற்று வந்தன. இத் திருப்பணி வேலைகளை இருபத்துநான்கு பேர் முன்னின்று நடத்தினர்கள். திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து முத்துக்குமார சுவாமி விக்கிரகம் ஐம்பொன்னால் வார்க்கப் பெற்று அலங்கார உற்சவம் நடத்தப்பட்டது. 1890ஆம் ஆண்டு ஆலயம் புதுப்பிக்கப் பெற்றுத் திருத்த வேலைகளும் நடைபெற்று மகாகும்பாபிஷேகம் சிவ ஸ்ரீ நீலகண்டக் குருக்களால் நிகழ்த்தப்பெற்றது.

1915 ஆம் ஆண்டில் சைவப் பெரியார் கோபாலி கந்தையா அவர்களால் ஆறுமுகப்பெருமானது எழுந்தருளி விக்கிரகமும் தாண்டவமாடும் நடராஜப் பெருமானுடைய விக்கிரகமும் ஐம்பொன்னால் வார்க்கப்பட்டு ஆலயத்திற் பிரதிஷ்டை செய்யப்பெற்றன.

ஆறுமுகப் பெருமானுடைய அருளொழுகு திருமுகங்கள் கலையம்சம் பொருந்தியனவாயும் தரிசிப்பவருக்கு பக்தியை தருவனவாகவும் அமைந்து காணப்படுகின்றன.

பஞ்ச கிருத்தியங்களை விளக்கி நிற்கும் நடராஜத்திருமேனி உலக இயக்கத்தையும் முத்திப்பேற்றையும் எடுத்துக் கூறுவதாக அமைந்து விளங்குகிறது. இவ்வாண்டிலேயே கொடித்தம்பம் அமைக்கப் பெற்று முதன்முதலாகத் துவஜாரோஹணமாகி (கொடியேற்றம்) மஹோற்சவம் மிகு சிறப்பாக நடைபெற்றது. சிவ ஸ்ரீ நீலகண்டக் குருக்களைத் தொடர்ந்து சிவஸ்ரீ அப்பாத்துரைக் குருக்கள் மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தான மஹோற்சவ விழாக்களில் பிரதம குருக்களாகப் பணியாற்றினர்.

1927 ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ செல்லத்துரை ஐயர் அவர்களால் விநாயகப் பெருமானின் எழுந்தருளி விக்கிரகம் ஐம்பொன்னால் வார்க்கப்பட்டு உபயம் செய்யப்பட்டது.

1936 ஆம் ஆண்டு சண்டேசுவரருக்கு திரு. வ. செல்லத்துரை அவர்களாலும் சந்தானகோபாலருக்கு திரு. ச. வே. சண்முகம்பிள்ளை அவர்களாலும் நடராஜருக்கு வைத்திய கலாநிதி சு. நடராஜா அவர்களாலும் கோயில்கள் கட்டப் பெற்றன. இத்திருப்பணி வேலைகள் பூர்த்தியானதும் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

### சித்திரத்தேர்

1938 ஆம் ஆண்டு முருகப் பெருமானுக்கு அறுகோண வடிவமைந்த சித்திரத்தேர் கொக்குவில் மேற்கைச்சேர்ந்த திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களால் சொந்தச் செலவில் அழகுற அமைக்கப்பெற்றது. பாரத நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட திரு. சுப்பிரமணியம் ஸ்தபதியார் குழுவினரே இச்சித்திரத்தேரை ஆக்கித் தந்தவர்களாவர். இத்தேரானது ஈழநாட்டின் சித்திரக்கலையையும் புராணக் கதையையும் கூறும் தேராக அமைந்து காணப்படுகிறது.

இதில் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், மகாபாரதம், பாகவதம் ஆகிய நூல்களிலே காணப்பெறும் கதைகள் சித்திரித்து காட்டப்பட்டுள்ளன. 1939 ஆம் ஆண்டு இத்தேர் அடியார்கள் புடைசூழ வெள்ளோட்டம் விடப்பட்டு முருகப் பெருமானுக்குரிய அழகிய தேரானது தேர்த்திருவிழா வன்று மகேஸ்வர பூசையும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

1946 ஆம் ஆண்டு திரு ச. வே. சண்முகம்பிள்ளை அவர்கள் கோபுரத் திருப்பணிகளை இனிதே நிறைவேற்றினர். 1947 ஆம் ஆண்டு வரை சிறு சுச்சிறுகப் பல திருப்பணிகள் நடைபெற்று 1948 ஆம் ஆண்டு மீண்டும் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1954, 1956, 1957, 1978, 1981 ஆம் ஆண்டுகளில் அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் மஞ்சவனப்பதிக்கு வருகை தந்து சுதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகளும் இவ்வாலயத்தில் சுதாப்பிரசங்கங்களை நிகழ்த்தியுள்ளார்கள்.

இப்புண்ணிய புருஷர்களின் அருளுரைகளும் வழிகாட்டலும் பக்தர்களைக் கவர்ந்தன. 1965 ஆம் ஆண்டு ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்று 1968 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் இனிது நடைபெற

(7-ஆம் பக்கம் பார்க்க)

### தர்மகர்த்தா சபை

திரு. இ. பொன்னம்பலம் — தலைவர்
திரு. த. சோமசுந்தரம் — உபதலைவர்
திரு. கா. பாலசுப்பிரமணியம்— செயலாளரும் நம்பிக்கைப்பொறுப்பாளரும்
திரு. இ. இராசலிங்கம் — உப. செயலாளர்
திரு. இ. தேவசுந்தரலிங்கம் — தனாதிகாரி


முருகன் அருள் பெற
★ வாழ்த்துகின்றோம் ★

மஞ்சவனப்பதி முருகா!
வரத்தை அருளாக்கி பயனைப் பாலிப்பீராக......
" எலக்ரோ றெவ் கூல் எஞ்சினியர்ஸ் "
மிகச்சிறந்த முறையில்
★ வீடியோவில் படம் பிடிப்பதிலும்
★ குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும்
★ சகலவிதமான எலக்றிக்கல், எலக்ரோனிக் பொருட்களை திருத்தவும்
இன்றே நாடுங்கள்

எலக்ரோ றெவ் கூல் எஞ்சினியர்ஸ்
கொக்குவில் சந்தி.
கொக்குவில்.

ஸ்ரீ நளாயினி ஸ்ரோர்ஸ்
உதயன், சஞ்சீவி
கொக்குவில் முகவர்.

சகல விதமான மின்சார உபகரணங்களுக்கும் நாட வேண்டியது
சிவா எலக்ரிக்கல் ஸ்ரோர்ஸ்
கே. கே. எஸ். றேட்,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

சி. பஞ்சாட்சரம்
சப்பரக்காரர்
இணுவில் தெற்கு.
இணுவில்.

அருள்தரு மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தான வர்ண அமைத்தவரும் இத்துறையில் 23 வருட அனுபவமுமுள்ள முதன்மை வாய்ந்த ஒரே ஸ்தாபனம்.
'கலைவாணி கலை அகம்'
திரு. மு. இ. கனகராசா (ஆச்சாரியார்)
அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

முருகன் அருள் பெற
★ வாழ்த்துகின்றோம் ★
நிரு ரியூசன் சென்ரர்
புகையிரத வீதி,
கோண்டாவில்.
ஆண்டு 4 முதல் A/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ சீமெந்து கட்டிட பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
கீதா ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,
திருநெல்வேலி.

முருகன் அருள் பெற
★ வாழ்த்துகின்றோம்! ★
பலசரக்கு ஸ்தாபனம்
★ கணேசா ஸ்ரோஸ் ★
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

★ மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து பொருள்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
★ கரன் ரேடிங் கொம்பனி ★
K. K. S. றேட், தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

முருகன் அருள் பெற
★ வாழ்த்துகின்றோம் ★

சிவமயூரன் மில்
ஆடிய பாதம் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

"நிம்போலோ"
K. K, S. றேட், கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

சண்முகன் சேல்ஸ் சென்ரர்
K. K. S. றேட், குளப்பிட்டிச்சந்தி,
கொக்குவில்.

கணேசன் ரேடிங் கொம்பனி
கந்தசாமி கோயில் சந்தி, K. K. S. றேட்,
இணுவில்.

"புஸ்பா குறூப்"
கட்டிட ஒப்பந்தகாரர்,
குட்செட் றேட்,
கோண்டாவில்.
உரிமையாளர்:
எ. எஸ். தம்பிஐயா.

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்.
ஆண்டு 5 முதல் A/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன

'வேருவல பார்மஸி'
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வே. இராமுப்பிள்ளை
குடும்பம்
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

'கந்ததாஸ் சிற்பாலயம்'
ஆலய கட்டிட சிற்ப வர்ண வேலை ஒப்பந்தகாரர்
உரிமையாளர்: ஸ்தபதி
சிற்பகலாபானு க. ரவீந்திரராச
அராலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வளர்ச்சிக்காக

# தனியார் கல்வி நிறுவனங்களும் நூல் நிலையம் திறக்க வேண்டும்

கிளிநொச்சி, ஜூன் 07

''இந் நூல் நிலையத்தில் வேறு எந்த நிலையங்களிலும் இல்லாத அரும் பெரும் நூல்களைக் கண்டு வியப்படைகிறேன். தனியார் கல்வி நிறுவனங்களும் கல்வி வளர்ச்சிக்காக நூல் நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும். இந் நிறுவனத்தின் முன் மாதிரியை மற்றைய நிறுவனங்களும் பின் பற்ற வேண்டும்.''

கிளிநொச்சி விஞ்ஞான கல்வி நிலையத்தில் நடைபெற்ற நூலகத் திறப்பு விழாவிலும்— கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து முதல் முறையாகப் பொறியியல் துறைக்கும் உயிரியல் துறைக்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களான செல்வன் தங்கமுத்து சண்முகம், முத்துராசா இரவீந்திரன் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பாராட்டு விழாவிலும் பிரதம விருந்தினராகக்கலந்து உரையாற்றுகையில் கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. கே. சோமசுந்தரம் மேற் கண்டவாறு கூறினார்.

நிலைய நூலகத்தை விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. எஸ். கமலநாதன் திறந்து வைத்தார்.

விஞ்ஞானக் கல்வி நிலைய அதிபர் திரு. எம். ஏ. கனகசிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

இந்து மகாவித்தியாலய ஆசிரியையும் மாதர் சங்கத் தலைவியுமான திருமதி சோமசேகரம்பிள்ளை பேசுகையில் 'கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வித்துறையில் சிறந்த மாணவர்களை உருவாக்குவதில் இக்கல்வி நிலையம் சிறந்த பணியாற்றி வருகிறது. அத்துடன் சிறந்த மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி ஊக்குவிப்பது பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

இப்படி அவர் கூறினார். கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. எஸ். சோதிநாதன், வட்டக்கச்சி கொத்தணி அதிபர் திரு. அரியரத்தினம், உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. வே. நாகலிங்கம், சென். திரேசா மகளிர் மகா வித்தியாலய அதிபர் திருமதி பரஞ்சோதி மார்க்கண்டு, கனகாம்பிகை அரசினர் தமிழ் பாடசாலை அதிபர் திரு. சி. நடராசாவும் நிலைய மாணவ மாணவிகளும் பாராட்டுரை வழங்கினார்கள். (ச)

## புதிய தலைவர்

புதுக்குடியிருப்பு, ஜூன் 7

புதுக்குடியிருப்பு பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் வருடாந்தக் கூட்டத்தில் புதிய தலைவராகத் திரு. அ. செல்வராசா தெரிவு செய்யப்பட்டார். (ச-126)

## ஊரி அ.மி.த.க பாடசாலை அபி. சங்கம்

காரைநகர், ஜூன் 7

காரைநகர் ஊரி அ.மி.த.க பாடசாலையில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குராப்பணக் கூட்டத்தில் புதிய தெரிவுகள் இடம் பெற்றன.

தலைவர் திரு. மு. கிருஸ்ணன் (அதிபர்) உப தலைவர் திரு. ஐ. சுந்தரபிள்ளை, செயலாளர் ந. கந்தசாமி, உப செயலாளர் திருமதி சண்முகம் தங்கமுத்து பொருளாளர் திரு. அ. ஜெயக்குமார். (இ-73)


கட்டிடத் தொழில் நுட்பவியல் நிறுவனம்

136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

வார இறுதி வகுப்புகள்

ஆரம்பம்: 10- 06- 1989 காலை 8. 30 மணி

பயிற்சிநெறிகள்:

1. DIPLOMA IN DRAUGHTSMANSHIP
2. DIPLOMA IN QUANTITY SURVEYING
3. PREPARATION FOR TECHNICAL OFFICERS PROMOTION EXAMS & N. D. T. EXAMS.

(11171)


# யாழ் அப்போதிக்கரீஸ் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ் உதைபந்தாட்டச் சங்கம் (லீக்) நடத்தும் யாழ் அப்போதிக்கரீஸ் கிண்ணத்துக்கான 11 பேர் கொண்ட லீக் முறையிலான உதைபந்தாட்டப்போட்டி குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர் வரும் 9-ஆம் திகதி தொடக்கம்25-ஆம் திகதிவரை நடைபெறும்.

புதிய போட்டி அட்டவணையின்படி.

9ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'பி' பிரிவைச் சேர்ந்த சென்றெக்குக்கு எதிராக ரைக்கிங்ஸும் 'ஏ' பிரிவைச் சேர்ந்த சென்மேரிஸுக்கு எதிராக பொற்பதியும்,

10-ஆம் திகதி சனிக்கிழமை பி II பிரிவைச் சேர்ந்த யுத்கார்மலுக்கு எதிராக அல்லைப்பிட்டியும், 'ஏ' பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் வி. க.வுக்கு எதிராக சென் நிக்கலசும்,

16ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'பி' பிரிவைச் சேர்ந்த சென் ஜேருக்குக்கு எதிராக முஸ்லிம் வி. க.வும், பி II பிரிவைச் சேர்ந்த அராலிக்கு எதிராக அல்லைப்பிட்டியும்,

17-ஆம் திகதி சனிக்கிழமை பி பிரிவைச் சேர்ந்த சென் மேரிஸுக்கு எதிராக வைக்கிங்ஸும் ஏ பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் வி கவுக்கு எதிராக அரியாலையும்

18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏ பிரிவைச் சேர்ந்த சென் மேரிஸுக்கு எதிராக சென் நிக்கலாசும்,

23-ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'பி I' பிரிவைச் சேர்ந்த சென் ஜேருக்குக்கு எதிராக சென் மேரிசும 'பி II' பிரிவைச் சேர்ந்த யுத்கார்மலுக்கு எதிராக அராலியும்,

24-ஆம் திகதி சனிக்கிழமை 'பி I' பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் வி. கவுக்கு எதிராக வைக்கிங்ஸும் 'ஏ' பிரிவைச்சேர்ந்த சென்மேரிஸுக்கு எதிராக அரியாலையும்,

25-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'பி II பிரிவைச்சேர்ந்த கல்வாணிக்கு எதிராக அல்லைப்பிட்டியும், ஏ பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் வி கவுக்கு எதிராக பொற்பதியும் விளையாடும். [க]

## சென் பெனடிற் விளை. போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 7

நல்லூர் சென் பெனடிற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் சமீபத்தில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் அருட்செல்வி எம். லைசா தலைமையில் இடம் பெற்ற இப்போட்டிகளில் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயக மூர்த்தி பிரதம விருந்தினராகவும், அருட்திரு. இ. யோசேப் அடிகளார் கௌரவ விருந்தினராகவும், அருட்செல்வி ஏ. சி. மாறி கொன்ஸ்ரன்ஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலை உதவி ஆசிரியை திருமதி ஹென்றி வில்லியம்ஸ் நாகேஸ்வரி நெறிப்படுத்திய பாலர்களுக்கான இசையுடன் கூடிய உடற் பயிற்சி நிகழ்ச்சி அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. (க – 13)

## வட்டு கொத்தணி போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன்07

''போதை வஸ்து'' என்னும் விடயம் சம்பந்தமாக வட்டுக்கோட்டை கொத்தணி பாடசாலைகள் போரூட் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடத்தும் போட்டிகள் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும்.

ஆண்டு 3, 4, 5 கீழ்ப்பிரிவு.
ஆண்டு 6, 7, 8 மத்தியபிரிவு
ஆண்டு 9, 9க்கு மேல் மேற்பிரிவு.

ஒவ்வொரு பிரிவுக்கும் நான்கு வகையான போட்டிகள் நடைபெறும். (1) பேச்சு (2) கட்டுரை (3) கவிதை (4) சுவரொட்டி விளம்பரம்.

ஒவ்வொரு போட்டிக்கும் 3 பரிசுகள் போரூட் ஸ்தாபனத்தால் வழங்கப்படும். [க]

## ஸ்கந்தா இல்லப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 7

சுன்னாகம்ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையே மெய்வல்லுநர்ப் போட்டிகள் 10 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (க)

10 லட்சம் ரூபா செலவில்

# பலாலி சித்தி விநாயகர் பாடசாலைக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் பலாலி சித்தி விநாயகர் மகாவித்தியாலயத்துக்கும் புதிய கட்டடம் ஒன்று 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட இருக்கிறது.

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையின் போது இவ் வித்தியாலயம் இருந்த காணி சுவீகரிக்கப்பட்டது. அதனால் அங்கு கல்வி பயின்ற ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தமது கல்வியைத் தொடர முடியாது கஷ்டப்பட்டனர்.

இதையடுத்து தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் கட்டடம் ஒன்றை தந்துதவி இவ் வித்தியாலயம் இயங்க உதவியிருந்தது.

இவ் வித்தியாலயத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தரும்படி வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் உட்பட பல அமைப்புக்கள் கேட்டு வந்தன.

இப்போது, ஆசிய வங்கி உதவியுடன் இவ் வித்தியாலயம் அமைக்க காணி கொள்வனவு செய்யப்பட்டு, இருமாடிக் கட்டடம் அமைக்க கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ-3)

## சனசமூக நிலைய சமாஜ கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் சமாசத் தலைவர் திரு. எஸ். தியாகராஜா தலைமையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா, யாழ். மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம், யாழ். உதவி அரச அதிபர் திரு. சபாபதிப்பிள்ளை, நல்லூர் உதவி அரச அதிபர் திரு எஸ். சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க-13)





தாயின் மென்மைப பராமரிப்பைத் தரும்

பேபி ஷெரமி-குழந்தையுடன் உங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ளச் சிறந்த வழி. மென்மைப் பரிவுடன் கூடிய அன்னையின் அன்பே குழந்தைச் செல்வத்தின் சொகுசையும் சுகத்தையும் இதமாகப் பேணுகிறது. தாயின் அதே மென்மைப் பராமரிப்பைச் சேய்க்கு வழங்குவது பேபி ஷெரமி மட்டுமே!

குழந்தையைப் பேணும் பொருள் வரிசை கொண்ட பேபி ஷெரமி, அதி தூய்மையும் அதி சிறப்பும் வாய்ந்த சேர்வம்சங்களுடன் ஒரு தாய் மட்டுமே வழங்கும் பக்குவத்துடனும் கவனத்துடனும் தயாரிக்கப்படுகிறது. பேபி ஷெரமி சிக்கனமும் மிக்கதும் கூட,

கொலோன் 54 மி. லி.—29/50 கிறீம் — 29/50
108 மி. லி.—47/50 சோப் — 8/50
டால்க் —14/90

அன்னையின் பரிவுக்கு உன்னதச் சின்னம் பேபி ஷெரமி

தரமான பொருள்களை வழங்கும் சேறமாஸ்

D&D



THURKKAA GOLDEN BEACH INN

42, Sagara Road, Bambalapitiya.

COLOMBO - 4

துர்க்கா கோல்டன் பீச் இன்

(விநாயகர் கோயில் எதிரில் - கடல் பக்கம்)

★ லாட்ஜ் ★

42, சாகர ரோட், பம்பலப்பிட்டி, கொழும்பு - 4

சகல வசதிகளுடன் உங்களை வரவேற்று தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்கின்றோம்

● தங்குமிடம் ● உணவு வசதி ● போக்குவரத்து வசதிகள்
● வெளிநாட்டு, உள்நாட்டு தொலைபேசி வசதிகள்

நியாயமான செலவுடன் செய்து தருகின்றோம்:

ஒருமுறை விஜயம் செய்து உண்மையை அறியுங்கள்.

தொலைபேசி எண்: 580846

மேல் விபரங்களுக்கு:

துர்க்கா ஹோட்டல்

49, யூனியன் பிளேஸ்,

கொழும்பு - 2இல் தொடர்பு கொள்ளலாம்.

[சி-2774]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

**பொருள்:**
உயர்குடியில் பிறந்தவரிடத்தில் உண்டாகும் குற்றம் ஆகாயத்தில் திங்களிடம் காணப்படும் களங்கம் போல் பலரறியத் தோன்றும்.

உதயன்
இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805
22078
07 - 06 - 1989
ச: பெ: இல: 28

## கீறல் விழுந்த ஒலித்தட்டை உரக்கப் பெருக்கி என்ன பயன்?

தென்னிலங்கையில், கேகாலை மாவட்டத்தில் நிகழ்ந்த மண்சரிவுகளுக்குப் பலியாகி இறந்தவர்களின் எண்ணிக்கை மூன்று நூறுகளுக்கு மேலாகவும் உயர்ந்து விட்டது. இயற்கையின் சீற்றத்தினால் இத்தனை உயிர்களும் பலிகொள்ளப்பட்டது கவலை தருவதாகும், உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்குப் பெரும் இழப்பு. நாட்டுக்கும் இழப்பே.

மழை; அதனால் வெள்ளம், அதனால் மண்சரிவு என்றும்—

வெயில்; கடும் வெப்பம் அதனால் வரட்சி, அதனால் பாதிப்பு என்றும்—

சூறாவளி அல்லது புயல்; அதனால் உயிரிழப்பு, உடைமைகள் இழப்பு என்றும்—

இயற்கையின் அனர்த்தங்கள் உலகின் பல நாடுகளிலும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. உயிர், உடைமைச் சேதங்களை உண்டாக்கிய வண்ணமே இருக்கின்றன.

அவற்றுக்கு மேலதிகமாக விமான விபத்து ரயில் விபத்து என்று விபத்துக்களாலும் மக்கள் உயிரிழக்க நேரிடுகிறது.

இவை போதாது என்ற தோரணையில், மனிதனே ஒருவனை மற்றவன் அழித்துக் கொள்ள வழி செய்யும் போரும், குழப்பமும், கிளர்ச்சியும், வன்செயலும் நாளாந்தம் நாட்டுக்கு நாடு நடந்து கொண்டே இருக்கின்றன.

மனிதன் தன்னைத் தானே அழித்துக்கொள்ள முனையும் போதெல்லாம், இயற்கையும் அவனை அழித்துக் கொள்ள முந்திக்கொள்வது வழக்கமாகிவிட்டது.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் எந்தளவுக்கு முன்னேறிவிட்ட போதிலும், இயற்கையின் அனர்த்தங்களை முற்றாகத் தடுத்துவிடக் கூடிய சக்தி மனிதனுக்கு இல்லை. ஆகக் கூடியது மிகச் சிரமப்பட்டு, முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து அழிவையும் சேதத்தையும் குறைத்துக் கொள்ளலாம்; ஓரளவு தப்பித்துக் கொள்ளலாம். அவ்வளவுதான்.

தென்னிலங்கையில், குறிப்பாக மலைநாட்டுப் பிரதேசத்தில், வெள்ளம், மண் சரிவு அவற்றால் உயிர், உடைமை நஷ்டங்கள் என்பன வருடாந்த நிகழ்வுகள். அதுவும் இரத்தினபுரி போன்ற தாழ்ந்த பிரதேசங்கள் எங்கள் யாழ்ப்பாணத்துப் பஸ் நிலையம் போன்றவை! சிறு மழை, சில மணி நேரம் தொடர்ந்து பெய்து விட்டால் போதும்; அதன் பெறுபேறு வெள்ளம் தான்!! வருடத்தில் நான்கு தடவைகள் அங்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!!!

இம்முறை இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மாவட்டங்களில் பெய்த மழை, உண்டான மண்சரிவுகள் என்பன கடந்த முப்பது வருடங்களில் மிக வன்மையானவை என்று அரசாங்க அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள்.

தாம் மேற்கொள்ள வேண்டிய நிவாரண, புனர்வாழ்வுப் பணிகள் பாரியனவாக இருக்கப் போகின்றன என்பதற்காக அவர்கள் இப்படிப் பெரிதுபடுத்திக் காட்டியிருக்கலாம்.

வருடாந்தம் வருகிறதே வெள்ளப் பெருக்கும், மண் சரிவும் — அவற்றின் அனர்த்தங்களில் இருந்து மக்களை முன்னேற்பாடாகப் பாதுகாக்க ஏதாவது உருப்படியாகச் செய்யப்பட்டிருக்கிறதா என்று அதே அதிகாரிகள் தலையில் குட்டிக் கேட்க வேண்டும் மக்கள்!

ஆகக் குறைந்தது, மழை தொடர்கிறது என்ற நிலையிலாவது, மக்களையும் அவர்களது முக்கிய உடைமைகளையும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் மாற்றக் கூடிய ஏற்பாடாவது செய்யப்பட்டுள்ளதா?

குறிப்பிட்ட பிரதேசத்தில், நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மேல் மழை பெய்தால், இலகுவில் மண்சரிவுகள் ஏற்படக்கூடிய சாத்தியம்– இடங்கள் எவை என்பதாவது இனங்காணப்பட்டிருக்கிறதா? சம்பந்தப்பட்ட பகுதிகளில் மக்களைக் குடியேற விடாமல் தடுக்கவோ அல்லது முற்பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு அகற்றவோ திட்டம் ஏதும் உண்டா?

வருடாந்தம் மழை வருகிறது, வெள்ளம் போடுகிறது, மக்கள் இறக்கிறார்கள், வீடு வாசல்களை இழக்கிறார்கள், நிவாரணம் வழங்கப்படுகிறது என்ற கீறல் விழுந்த ஒலித்தட்டை, உரக்க ஒலிபெருக்குவதால் என்ன பயன்? மக்களுக்குத்தான் என்ன நன்மை?

## நாகம்மாள் கோயில்

எடுப்பு

நாகம்மாள் கோயில் என்று தினம் போற்றுவார் -அவள்
நலம் சொல்லுவார் பிள்ளை வரம் கொள்ளுவார் – நயினை
(நாக)

தொடுப்பு

பாகமாய்ச் சிவனிருக்கப் பணிந்தேத்துவார் – ஆழ்
பரவையைக் கடந்து வந்து சிரம் கூப்புவார் (நாக)

முடிப்பு

கைலாச வாகனத்தில் அம்மை வருவாள் - எழிற்
காட்சியைக் கண்டவர்கள் மெய்யுருகுவார்
பைநாகப் பாம்பதனைப் பார்த்துருகுவார் – அப்
பரவசத்தில் தமை மறந்து கூத்தாடுவார். (நாக)

**நயினைக்கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை**
(இன்று 07 – 06 – 1989 நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மூன்றாம் திருவிழா)

சீன இராணுவத்தில் மோதல்

# பிரதமர் லீபெங்கை கொல்லமுயற்சி; காயங்களுடன் உயிர் தப்பினர்!

### சுட்ட காவலர் தற்கொலை

பீகிங், ஜூன் 06

சீனப் பிரதமர் லீபெங் கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பினார்.

கடந்த ஞாயிறு இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அப்போது பிரதமருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் ஹொங்கொங்கில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

சீனமொழியில் பிரசுரமாகும் அப்பத்திரிகைச் செய்தியின் படி—

பிரதமர் லீபெங்கின் மாளிகையைக் காவல்புரியும் செங் காவலர் ஒருவர் பிரதமரை நோக்கி நான்குமுறை சுட்டார்.

பின்னர் அந்தக் காவலர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இக்காவலரின் 3 உறவினர்கள் தியனன்மன் சதுக்கத்தில் இரண்டு தினங்களுக்கு முன்னர் சீன இராணுவம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கொலை முயற்சியைத் தொடர்ந்து பிரதமரின் மாளிகையைக் காவல் புரியும் 170 காவலர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட்டன.

பிரதமர் லீ பெங்குக்கு காயங்கள் ஏற்பட்டன. ஆனால் அவர் உயிர்தப்பிவிட்டார்.

**கருத்து வேறுபாடு**

மாணவரின் கிளர்ச்சியை அடக்க தொடர்ந்தும் பலாத்காரம் பாவிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி சீன அரசின் மக்கள் விடுதலை இராணுவத்தினரிடையே கருத்து வேற்றுமையேற்பட்டுள்ளதாக பி. பி. சி அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக இராணுவ வீரர்கள் மத்தியில் மோதல்கள் ஏற்பட்டதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் வந்திருப்பதாகவும் பி. பி. சி வானொலி அறிவித்தது.

இதனிடையில், தியனன்மன் சதுக்கத்தை மூன்றாவது தினமாகவும் சீன இராணுவம் முற்றுகையிட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

இன்றும் நகரில் சில பகுதிகளில் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டன, (எ)

## சீனாவுக்கு ஆயுத விற்பனை இடைநிறுத்தம் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 6

சீனாவுக்கு ஆயுதம் விற்பது மற்றும் தொழில் நுட்ப, வர்த்தக உறவுகளை இடைநிறுத்தி வைத்திருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்று செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

ராஜதந்திர உறவை முற்றாகத் துண்டிக்காத ஒன்றுதான் இப்போது இரு நாடுகளுக்கு இடையேயான தொடர்பாக இருக்கும் என்றும் அதிபர் புஷ் தெரிவித்தார்.

பீகிங்கில் உள்ள அமெரிக்கத் தூதரை திருப்பி அழைக்கத் தான் விரும்பவில்லை என்றும் அதிபர் புஷ் சொன்னார்.

மாணவரின் ஜனநாயகக் கிளர்ச்சியை சீன இராணுவத்தைக் கொண்டு அடக்கியதைக் கண்டித்தே இந்த நடவடிக்கையை அமெரிக்கா எடுத்துள்ளது.

சீனாவுக்கு ஆயுதங்கள் மற்றும் தொழில் நுட்ப உதவிகள் வழங்குவதை உடனடியாக முற்றாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அமெரிக்கத் தூதரை பீகிங்கில் இருந்து ஆலோசனைக்காக திருப்பிஅழைக்கவேண்டும்என செனட் வெளியுறவுக் கமிட்டித் தலைவரான செனட்டர் ஸ்டீபன் சோலார்ஸ் நேற்று டெலிவிஷனில் பேசுகையில் தெரிவித்தார்.

சொந்தமக்களையே கொன்று குவிக்கும் செயலை ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும் சோலார்ஸ் மேலும் சொன்னார்.

இதனிடையில்ஆஸ்திரேலிய பிரதமர் பொப்ஹோக் ஆண்டின் இறுதியில் தான் மேற்கொள்ளவிருந்த சீன விஜயத்தை ரத்துச் செய்து விட்டார்.

சீனாவின் இராணுவ நடவடிக்கையை ஆட்சேபித்து கான்பெரா அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது. (எ)

## சீனாவில் வெளிநாட்டுச் செய்தியாளர் செய்தி சேகரிப்பதற்கு அதிகாரிகள் அனுமதிதேவை

பீகிங், ஜூன் 6

சீனாவில் மாணவர் போராட்டம் பற்றிய செய்திகளைத் திரட்டுவதற்கு வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

பீகிங் நகர அதிகாரிகளிடம் முன்கூட்டியே வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அனுமதி பெற்றபின்னரே செய்திகள் திரட்டவேண்டும் என்று சீன அரசு கடுமையான நிபந்தனை விதித்திருக்கிறது.

பீகிங்கில் உள்ள 162 வெளிநாட்டுச் செய்தியாளர் குழு இத் தடையை பலமாகக் கண்டித்திருக்கிறது.

ஈரான் அரசியல்

## புதிய ஆத்மீகத் தலைவராக ஜனாதிபதி அலி கமெனி

தெஹ்ரான், ஜூன் 06

ஈரானின் புதிய ஆத்மீகத் தலைவராக ஜனாதிபதி அலி கமெனி தெரிவுசெய்யப்பட்டார்.

ஆயதுல்லா கொமேனியின் மறைவைத் தொடர்ந்து ஈரான் தலைமைப்பீடம் கூடி பல மணித்தியாலய ஆலோசனையின் பின்னர் இந்தத் தெரிவைச் செய்தது.

இவரது நியமனம் நிரந்தரமானதா என்று அறிவிக்கப்படவில்லை.

ஆனால் ஜனாதிபதி பதவிக்கு நாடாளுமன்றச் சபாநாயகர் அலி ரன்சவ்ஜானி நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## போலந்தில் கம்யூனிஸ்ட் தோல்வி!

வார்ஸோ, ஜூன் 6

போலந்துத் தேர்தலில் சொலிடாரிட்டி தொழிற்சங்க வேட்பாளர்கள் அமோக வெற்றியீட்டினர்.

நாடாளுமன்றத்தில் தொழிற்சங்கம் அதற்கு ஒதுக்கப்பட்ட 35 தொகுதிகளிலும் வெற்றியீட்டியது.

செனட் சபையில் அனைத்து ஆசனங்களையும் சொலிடாரிட்டி வேட்பாளர்கள் கைப்பற்றினர்.

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி தனது தோல்வியை ஒப்புக் கொண்டது.

சொலிடாரிட்டி தொழிற்சங்கத்துடன் சேர்ந்து அரசு அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. (எ)

## அரச எதிர்ப்பு கிளர்ச்சி

புவனர்ஸ்அயர்ஸ், ஜூன் 6

ஆர்ஜென்ரீனா அரசின் பொருளாதாரச் சிக்கன நடவடிக்கைக்கு எதிரான எதிர்ப்பு, வன்செயலாக மாறியது.

பல நகரங்களில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுவரை 15 பேர் வரை கொல்லப்பட்டனர். (எ)

## அகதிகளின் போராட்டம்

ஹொங்ஹொங் ஜூன் 6

ஆறாயிரத்துக்கு மேற்பட்ட படகு மக்கள்'' என்று அழைக்கப்படும் வியட் நாம் ''அகதிகள் இன்று ஒருதடுப்பு முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

உண்மையான அகதிகள் பற்றியும் பொருளாதாரம் அகதிகள் பற்றியும் ஆய்வு ஒன்றை நடத்தி உண்மையான அகதிகள் அல்லாதவர்கள் என்று கருதப்படுவோரை வெளியேற்ற ஹொங்ஹொங் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதை ஆட்சேபித்து இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க)

# வடக்கு-கிழக்கில் முதல் நிகழ்ச்சி

## ஹாட்லி தபால் தலை வெளியீட்டு வைபவத்தில் கல்வி அதிகாரி உரை

வடமராட்சி ஜூன் 7

வடக்கு-கிழக்குமாகாணத்தில் ஹாட்லிக்கல்லூரிக்கே முதலாவதுதபால் தலை வெளியிடப்பட்டுள்ளது இதுபெருமைதரக் கூடிய ஒரு நிகழ்ச்சி ஆகும்.

150 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு ஹாட்லிக்கல்லூரியில் இடம்பெற்ற தபால்தலை வெளியீட்டு வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி திரு. பி. வீரபத்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

தபால்தலை வெளியீடு யாருக்கும் எதற்கும் எளிதில் கிடைக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியன்று அது ஒரு மாபெரு சகாப்தத்தை ஏற்படுத்திய அல்லது ஏற்படுத்தியவர்களுக்கு வழங்கப்படும் ஒரு அடையாளச் சின்னமாகும். அது போன்ற தூய்மையான ஒரு சின்னமே மேற்படி கல்லூரியும் அதன் வரலாறும்.

அவர் மேலும் பேசுகையில், இக்கல்லூரி வளர உதவியவர்களுக்கு இந்த நிகழ்ச்சிபெரும் பெருமை அளிக்கும். இது எதிர் காலத்தில் நீடிக்கவேண்டும் என்றார்.

ஹாட்லிக் கல்லூரி உப அதிபர் திரு எஸ் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பலரும் கலந்துகொண்டனர். (இ-160)

## தஞ்சமென வந்தவரை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாயிற்று.

**நந்தவன அமைப்பு**

1975 ஆம் ஆண்டில் திரு. த. நீதிராஜா அவர்களால் விநாயகப் பெருமானுக்குச் சித்திரத்தேர் அமைக்கப் பெற்றது. கோவிலில் நித்திய நைமித்திய பூசைகளுக்குத் தேவையான மலர்களைப் பெற்றுக் கொள்ளப் பொது மக்களின் முயற்சியால் கோயிலின் வடக்கு வாயில் பக்கமாக நந்தவனம் அமைக்கப் பெற்றது. இக்காலத்தில் அழகிய மணிக்கூட்டுக் கோபுரம் கட்டப்பெற்றுப் புதிதாக மணியும் இணைக்கப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் ஆலயம் சேதத்துக்கு உள்ளானது. அக்காலத்தில் கோயிலில் தஞ்சமடைந்தோர் ஆயிரக்கணக்கானவர். அவ்வகதிகளுக்கு உணவும் அடைக்கலமும் தந்து முருகன் காப்பாற்றியுள்ளான். அந்நேரத்தில் கோயில் தர்மகர்த்தா சபையினரும் சைவ இளைஞர்களும் சேர்ந்து அளப்பரிய சேவை செய்துள்ளனர். மஞ்சவனப்பதி முருகப் பெருமான் ஆலய தர்மகர்த்தாசபையினரின் பணிப்பில் உருவாகிய திருப்பணிச் சபையினர் பொதுமக்களின் உதவியுடன் திருப்பணி வேலைகளைச் செய்து நிறைவேற்றியுள்ளனர்.

**மூர்த்திகள் பிரதிஷ்டை**

சேதமடைந்த பகுதிகளைப் புதுக்கியதோடு புதிதாகக் கோயில்களும் கட்டி மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்யவுள்ளனர். சந்தான கோபாலருக்கு அருகில் மகாலட்சுமி கோயிலும், கோயில் உள்வீதியின் தென்பக்கத்தே சமய குரவர் நால்வருக்கும் கோயிலும், தம்பமண்டபத்துக்கு வடபால் நவநாயகர் கோயிலும் புதிதாக அமைத்துள்ளனர். அத்துடன் பழனி ஆண்டவர் எழுந்தருளியும் காத்தற் கடவுளாம் சந்தான கோபாலருக்குச் சக்தியாக மகாலட்சுமியைப் பிரதிஷ்டை செய்துள்ளனர். அடியவர்களின் பெருமையை அறிந்துகொள்ள சமய குரவர் நால்வரையும் பிரதிஷ்டை செய்துள்ளனர். இன்றைய நிலையில் மக்கள் தூர இடங்களுக்குச் சென்று நவக்கிரக வழிபாடு செய்ய முடியாமையை நிவிர்த்தி செய்ய முருகன் அருள் புரிந்தமை வணக்கத்திற்குரியது.

இன்று சுக்கில வருஷம் வைகாசிமாதம் 25 ஆம் நாள் (7-6-89) புதன்கிழமையும் பூச நட்சத்திரமும் வளர் சதுர்த்தி திதியும் சிங்கலக்கினமும் கூடிய சுபதினத்தில் முற்பகல் 10. 55 மணி தொடக்கம் 11.45 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் குடமுழுக்காடும் கலியுக வரதனும் மஞ்சவனப்பதியுறை முருகனைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்வோமாக.

அருவமும் உருவுமாகி
அநாதியாய்ப் பலவாய்
ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய.

-தர்மகர்த்தா சபை

## கும்பாபிஷேகம்

சாவகச்சேரி ஜூன்7

மட்டுவில் (சந்திரபுரம்) அருள்மிகுசெல்லப்பிள்ளையார் கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 23ஆம்திகதிவெள்ளிக்கிழமை நடைபெறும்.

19 ஆம் திகதி கிரியைகள் ஆரம்பமாகும்.

சிவஸ்ரீ சோ. சோமாஸ்கந்த குருக்கள் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவார். (இ-31)

## ஸ்ரீ ராகவேந்திரர் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 07

நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோவில் வீதியில அமைந்திருக்கும் ஸ்ரீ ராகவேந்திரர் ஆலயத்தில் நாளை 8ஆம் திகதி வியாழக்கிழமை ஸ்நபன அபிஷேகமும் விக்கிரகப் பிரதிஷ்டையும் நடைபெறவுள்ளது.

காலை 7. 22க்கும் 8. 22க்கும் இடையில் வரும் சுபவேளையில் ஸ்ரீ புவனேஸ்வரி, ஸ்ரீ ராகவேந்திரர் விக்கிரகப் பிரதிஷ்டை நடைபெற்று விஷேட தீபாராதனையும் அபிஷேகமும் நிகழும்.

மாலை 5 மணியளவில் "ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள்" பற்றிய கதாப்பிரசங்கமும் கிருஷ்ணகானம் இசை விருந்தும் இடம்பெறும். (இ)

## யாழ் மாவட்ட சாரணியரின் முல்லை வனப் பாசறை

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ் மாவட்ட சாரணியரின் முல்லைவனப்பாசறை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது.

20 பாடசாலைகளைச் சேர்ந்த 173 சாரணிகளும் சிரேஷ்ட சாரணிகளும், 17 வழிகாட்டுநரும் பாசறையில் பங்கு பற்றினர்.

பாசறை அனுமதிச் சீட்டுப் பெற்ற திருமதி ஞா. அருட்பிரகாசம், செல்வி மே. எலாயாஸ், திருமதி தே. அரியரத்தினம் ஆகியோர் பாசறையை ஒழுங்கு செய்தனர்.

பூஞ்சோலைப் பாசறையைச் செல்வி ஜே. பரம்ஜோதி, திருமதி எஸ். குணரத்தினமும்.

மிருகச்சோலை பாசறையைச் செல்விகள் ஆர். ஜீவானந்தம், ஆர். இராசையாவும்.

பழச்சோலை பாசறையைத் திருமதிகள் நல்லருளானந்தம், எஸ். பரஞ்சோதி ஆகியோரும் நடத்தினர்.

சிரேஷ்ட சாரணிய பாசறைக்குச் செல்விகள் சி. அருள்நந்தி கே. தெய்வநாயகம் பொறுப்பாக இருந்தனர்.

மரசசோலை, பறவைச் சோலைப் பாசறைகள் மக்களை மிகவும் கவர்ந்தன.

முதலுதவிக்குத் திருமதிசச்சிதானந்தம், செல்வி குலசிங்கம், திருமதி கணேசலிங்கநாதன், திருமதி சிவராஜா, செல்வி நடராசா பொறுப்பாக இருந்தனர்.

'காம் பயர்' (Camp fire) நிகழ்ச்சி எல்லா நிகழ்ச்சிகளுக்கும் மகுடம் வைத்தால்போல் சிறப்புற அமைந்திருந்தது. இதில் 20 பாடசாலைகள் பங்குபற்றின. [ச]

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

அளவெட்டி பெருமாள் கடவை பிள்ளையார் கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தேர்த்திருவிழா 17 ஆம் திகதி சனிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். (க)

## கைதடி கந்தசாமி கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் 10ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தேர்த் திருவிழா 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9. 00 மணிக்கும், தீர்த்தோற்சவம் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ச)

## லிஸ்பன் தந்த மணிவிளக்கே!

குதிக்கின்ற பொய்சூதும் கொலைய கந்தை
களவோடு வஞ்சனையும் கொக்க ரித்து
உதிரமது சில்லிடவே ஊழிக் கூத்து
ஆடுகின்ற புவியினிலே அவையடக்கி
முதிருமன்பால் பகைவென்று முத்தி பெற்றாய்!
மறைக்கரும்பே! மன்னுபுகழ் லிஸ்பன் என்னும்
பதித்த மணிவிளக்கே! புரளு கின்ற
பெருவெள்ளம் போலவருள் பொழியு மையா.

**-பாஷையூர் மு. சிங்கராயர்**

(இன்று 7-6-1989 பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் நான்காம் நாள் திருவிழா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



# உதயன்

07 - 06 - 1989 புதன்கிழமை



எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## கொமேனியின் ஜனசா நல்லடக்கம்

தெஹ்ரான், ஜூன் 7

ஈரானியப் பெருந்தலைவர் ஆயத்துல்லா கொமேனியின் ஜனசா திட்டமிட்டதை விடப் பிந்தியே நல்லடக்கம் செய்யப்பட்டது.

காலையில் நல்லடக்கம் செய்வதற்காக ஜனசா கொண்டுவரப்பட்டபோது மக்கள் நெரிசலால், ஹெலிகொப்டரில் திரும்ப எடுத்துச்செல்லப்பட்டது. நல்லடக்கம் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மாலையில் நடந்தது.

நல்லடக்க நிகழ்ச்சியில் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர் என மதிப்பிடப்பட்டிருந்தது. [அ]

மக்கள் தமது குறைபாடுகளை

## அரச திணைக்களங்களில் தெரிவிக்க வேண்டும்

### இ. அ. படையினர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் இனிமேல் தமக்கு உள்ள கஷ்டங்கள், குறைபாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களுடனேயே தொடர்புகொள்ள வேண்டும். அமைதிப்படை தொடர்பான விடயங்கள் குறித்து மட்டுமே யாழ். நகரக் கொமாண்டர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்கள் தங்களுக்கு உள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக இந்திய அமைதிப்படை முகாம்களுக்கோ அல்லது இலங்கைப் படை முகாம்களுக்கோ செல்லக் கூடாது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பிரசுரங்கள் மூலமும், பத்திரிகைகள் மூலமும் மக்களுக்கு அறிவித்திருந்தனர் அல்லவா?

அது சம்பந்தமாகக் கருத்து வெளியிடுகையிலேயே அமைதிப்படை வட்டாரங்கள் முன்கண்டவாறு தெரிவித்தன. அதே வட்டாரங்கள் மேலும் கூறியதாவது:—

கொழும்புக்குத் தொலைபேசித் தொடர்பு இல்லை என்பது பற்றியும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள். செயலக ஊழியர்கள் அடிக்கடி இல்லாது போவதனால் மக்களின் துயரங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஐ. நா. புனர்வாழ்வு உயர் ஸ்தானிகராலய முயற்சிகளும் கைகூடாமற் போயின—

மாகாண சபையும் சில கச்சேரி உத்தியோகத்தர்களும் வேலை செய்யும் நிலைமையில் மக்கள் தமது முறைப்பாடுகளை, பொலீஸ் அல்லது சம்பந்தப்பட்ட கச்சேரி உத்தியோகத்தர்களிடம் முன்வைக்க வேண்டும். மக்களின் கஷ்டங்களை குறைப்பதற்கு, பொலீசாரும், நீதிவான்களும் அனைத்து கச்சேரி உத்தியோகத்தர்களும் தவறாது பணிபுரிய வேண்டும் என்று இந்திய அமைதிப்படை அதிகாரிகள் பல தடவைகள் கேட்டுள்ளனர்.

இந்திய அமைதிப்படை சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மாத்திரம் அதன் யாழ்ப்பாண நகரக் கொமாண்டர் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்று இந்திய அமைதிப் படை எப்பொழுதும் கூறிவந்துள்ளது.

கொழும்புடனான தொலைத் தொடர்புகள் எந்த நிலைமையில் துண்டிக்கப்பட்டன என்பதை மக்கள் நினைவுகூரக் கூடும். இந்திய அமைதிப் படை சிக்னல் அதிகாரிகளின் சளையாத முயற்சிகளினால் தற்பொழுது கொழும்புக்கு ஒரு (தொலைபேசி) மார்க்கம் செயற்படுகின்றது. நெருக்கடியில் உள்ள மக்கள் அவசரச் செய்திகளை அனுப்ப கொழும்புக்குத் தொடர்பு செய்து கொடுக்கப்படுகின்றது, ஆனால் எல்லைக்குட்பட்ட திறன் காரணமாக, தற்போது இந்த வசதியைச் சகலருக்கும் செய்து கொடுக்கமுடியாமல் இருக்கிறது— என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-க)


## PROFESSIONAL EXAMS

( Nov - Dec 1989 )

| | | |
|---|---|---|
| I. D. P. M Part II | - | 10. 06. 1989 |
| I. A. B Inter & Finals | - | 18 06. 1989 |
| A. A. T (London) Inter | - | 18. 06. 1989 |
| A. A. T (Srilanka) Stage II | - | 10. 06. 1989 |
| (Dec - 1989) | | |
| C. I. M. A Stage I. II & III | | Commenced |

Contact

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St Peters Lane
Hospital Road,
Jaffna.

(C/2819)



## கேள்விப் பத்திர அறிவித்தல்

கமநல சேவைகள் திணைக்களம் — முல்லைத்தீவு மாவட்டம்

05-06-1989 ஆம் திகதி, திங்கட்கிழமை உதயன் பத்திரிகையில் வெளியான மேற்படி திணைக்களக் கேள்விப் பத்திர அறிவித்தலில், வேலைகளுக்கான கேள்விகள் 1989-07-01 என்பதனை 1989-06-21 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் திருத்தி வாசித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

செ. பஞ்சலிங்கம்

கமநல சேவை உதவி ஆணையாளர்,
முல்லைத்தீவு மாவட்டம். [C/2692]



## ஸ்ரீ மீனாட்சி ஷொப்பிங் கொம்பிளெக்ஸ்

யாழ்ப்பாணப் பட்டினத்தில்
பஸ் ஸ்ராண்டிற்கு அண்மித்து
இல. 430, ஆஸ்பத்திரி வீதியில்

மருந்தகமும்
பலசரக்கு மாளிகையும்
தன்னகத்தே கொண்டிருக்கும்

ஸ்ரீ மீனாட்சி ஷொப்பிங் கொம்பிளெக்ஸ்

ஆரம்பிக்கப்பெற்று இன்று முதல்
சேவையாற்றுகிறது.

[11188]


## வலதுகுறைந்தோர் விவரம்: யாழ். சமூக சேவைப் பகுதிக்கு இன்னும் அறிவிப்பு இல்லை!

நாடு முழுவதும் உள்ள வலது குறைந்தோர் விவரங்களை இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன் கிராமசேவையாளர்கள் சேகரிக்க வேண்டும் என்ற அறிவித்தல் யாழ். சமூக சேவை திணைக்களத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை.

நாடு முழுவதும் உள்ள வலது குறைந்தோர் விவரங்களை இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பாக நிரப்பி அனுப்பும்படி கோரி சமூகநலத் துறை பிரதிப் பணிப்பாளர் பேர்டி ஜெயசேகரா அறிவித்திருந்தார்.

இதற்கான படிவங்களும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் சமீபகாலச் சம்பவங்களால் கூடுதலானவர்கள் வலது குறைந்தவர்களாக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இது சம்பந்தமான அறிவித்தல் ஏதும் வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வறிவித்தல் வராத போதும் சமூக சேவைப் பகுதியினர் வலது குறைந்தோர் விவரங்களைச் சேகரித்து வருவதாக யாழ். சமூக சேவைப் பகுதியினர் தெரிவித்தனர். (ஒ-3)

## தனியார் பஸ் நிலையத்துக்கு இடம் துப்புரவு

யாழ்ப்பாணம், ஜூன் 7

தனியார்மினிபஸ்களை நிறுத்தும் நிலையம் ஒன்று அமைப்பதற்காக ஆஸ்பத்திரி வீதியில் உள்ள குறிப்பிட்ட இடம் நேற்று துப்புரவு செய்யப்பட்டது.

முன்பு சிங்கள மகாவித்தியாலயம் அமைந்திருந்த இடத்திலேயே இந்நிலையம் அமையவிருக்கிறது. (ஒ-3)

## வடமராட்சியில்

வடமராட்சி, ஜூன் 7

வடமராட்சியிலும் அனேகமான பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

புத்தூர் சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவித்தே இந்த ஹர்த்தால் இடம்பெற்றதாக அறியவருகிறது.

மாணவர்வரவுகுறைந்திருந்தது. மக்கள் நடமாட்டமும் மந்தநிலையில் இருந்தது. (ஒ-160)

## நெல்லியடியில் கிரனேட் வீச்சு

வடமராட்சி, ஜூன் 7

நெல்லியடியில் கொடிகாமம் வீதியில் நேற்று கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இச் சம்பவத்தை அடுத்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. சேதம் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (ஒ-160)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்றும் இன்றும் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

## புத்தூர் --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தூர்கண்டிக்காட்டுப் பகுதியில் நடந்த சம்பவங்களைக் கண்டித்தும் அங்கு நடந்த மோதலில் இறந்த இரு இளைஞர்களுக்கு அஞ்சலி தெரிவித்தும் புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி ஆகிய இடங்களில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

## என்ன வந்--

செல்லவேண்டும்.

இந்திய அமைதிப்படையை திரும்ப அழைக்குமாறு கேட்பது தவறு என்றும் ஒப்பந்தத்துக்குமுரணானதுஎன்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றே இந்தியப் படை இங்கு வந்தது. இலங்கை ஜனாதிபதி கேட்கும் போது அது திரும்பி போக வேண்டும் என்று ஒப்பந்தத்திலேயே கூறப்பட்டிருக்கிறது.

ஜூலை 2 ஆம் திகதி நான் பதவியேற்று ஆறுமாதங்கள் முடிகின்றன. ஜூலை 29 ஆம் திகதி இந்தியப்படை வந்து இரண்டு வருடங்கள் முடிகின்றன.

ஆகையால் எவ்வளவு விரைவில் இந்தியப்படை திரும்பி அழைக்கப்படுகிறதோ அவ்வளவு நல்லது — என்றார்.

## அமைதிப்---

தது. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

### மாகாண சபையில் தீர்மானம்

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் பின் நடந்த மாகாணசபையின் அவசர கூட்டத்தில் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் கண்டனத் தீர்மானம் ஒன்றை முன் மொழிந்தார்.

★ வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்புக்கு உறுதியான படை ஒன்று உருவாகும் வரை இந்திய அமைதிப் படை வெளியேறக் கூடாது.

★ இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நிபந்தனை இன்றி வாபஸ்பெற வேண்டும்.

★ வடக்கு - கிழக்கு மாகணத்தில் உள்ள சிங்கள ஆயுதம் தாங்கிய படையினர் வாபஸ் பெறப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு கண்டனத் தீர்மானத்தில் முதலமைச்சர் தெரிவித்தார்.

ஐ. தே. க உறுப்பினர் ஒருவரைத் தவிர ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் தீர்மானத்தை ஆதரித்தனர். (இ-150)

## ஆசிரியர்-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ப்பு அமைச்சிலேயே பதிவு செய்து வருகின்றனர்.

புதிய நடைமுறைப்படி உயர் கல்வி அமைச்சில் பதிவு செய்தாலேயே ஆசிரியர் நியமனங்களுக்கு அழைக்கப்படுவார்கள் என்று விஷயம் தெரிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. [ஒ-3]

## இந்தியப் படை வாபஸ்: ஐ தே.க. செயற்குழு ஆதரவு

கொழும்பு, ஜூன் 7

இந்திய அமைதிப்படையினரை வருகிற மாத இறுதிக்குள் திருப்பி அழைக்குமாறு ஜனாதிபதி பிரேமதாச விடுத்த வேண்டுகோளுக்கு ஐ. தே. க. செயற்குழு பூரண ஆதரவு தெரிவித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் வேண்டுகோளை ஏற்று அமைதிப்படையை அனுப்பியதற்காக இந்திய அரசுக்கு நன்றியும் அப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-எ)

## கிளிநொச்சி நகரில் கொள்ளை

வட்டக்கச்சி, ஜூன் 7

கிளிநொச்சி நகரிலுள்ள விற்பனை நிலையம் ஒன்று இரவில் உடைக்கப்பட்டு பல பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன

ஜெனரேட்டர்கள், வானொலிப்பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் முதலியன கொள்ளையிடப்பட்டன.

இது குறித்து கிளிநொச்சிப் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-168)

## நடைபாதை,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் கடைகளைத் திறக்க அவர்கள் தயக்கம் காட்டி வந்தனர்.

மூன்று தவணைகள் வழங்கப்பட்ட போதிலும் எவரும் கடைகள் திறக்காததை அடுத்து ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட இடங்கள் தற்பொழுது ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடைகளைத் திறப்பதற்காக பழைய சந்தைப் பகுதியில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளும் நிறுத்தப்பட்டன.

இந்தக்கடைகள் புதிய வியாபாரிகளுக்கு வழங்கப்பட உள்ளதாக அறியவருகிறது.

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதம் பாலச்சந்திரன்

வேலணை மேற்கைச் சேர்ந்த வேலாயுதம் பாலச்சந்திரன் (Authorised Officer for sales தேசிய கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், கொழும்பு) அவர்கள் 04 - 06 - 89 அன்று காலமாகிவிட்டார். இவர் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் வேலாயுதம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற மயில்வாகனம், பாக்கியலெட்சுமி தம்பதிகளின் மூத்த மருமகனும், ரவீந்திரன் (லண்டன்), சுரேந்திரன் (லண்டன்), சசிகலா (யாழ் இந்து மகளிர் கல்லூரி], பவீந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாநாதன், விசாலாட்சி, ஆனந்தநாயகி, தெய்வேந்திரன் (நைஜீரியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்னுச்சாமி, மாணிக்கவாசகர், லலிதாம்பிகை, செல்வகுமாரி [State Bank Of Inda Colombo], சத்தியலெட்சுமி, புஸ்பகாந்தி, பரமேஸ்வரி, வரதலெட்சுமி, அம்பிகைகுமாரன் [அம்பிகா ஸ்ரோர்ஸ் டாம்ஸ்ரீற் கொழும்பு] ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலச்சந்திரன் சிரேஸ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்]' காலஞ்சென்ற சிவலிங்கம் (அம்பிகை குமரன் ஸ்ரோர்ஸ் கொழும்பு), கார்த்திகேசு [குமராசாமி ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்], திருவிளங்கம் [ கபிலன் ரெக்ஸ் ரைல்ஸ் வேலணை] ஆகியோரின் அன்புச்சகலனும், தர்மவதியின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 07-06-89 இன்று புதன்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்காள்ளவும்,

நேரமாற்றத்துக்கு மன்னிக்கவும்

தகவல்:

செ. பாலச்சந்திரன்.

கைத்தனை வீதி,
வேலணை மேற்கு,
வேலணை. [876]

## அருள் ஷைலேந்திரா

ஊர்காவற்றுறை கரம்பொன் மேற்கு அயித்தாம் புலத்தைச் சேர்ந்த ஜெரோம் நீற்று தம்பதிகளின் அன்புப் புதல்வன் அருள் ஷைலேந்திரா 5. 6. 89இல் காலமானார். இவர் ஜெரோசினி, கிரிசேந்திராவின் அன்புச் சகோதரனும், தங்கப்பிரகாசம் செபஸ்தியம்மா, காலஞ்சென்ற வறக்கீஸ் கத்தரீன் தம்பதிகளின் அன்புப் பேரனும், விமலா பிறின்ஸ்லி [மன்னார்] ஸ்கொலஸ்ரிக்கா மரியதாஸ், யூக்கறிஸ்ரா தேவராஜா, அருட் சகோதரி கலிஸ்ரா பிரான்சிஸ் [திருக்குடும்ப கன்னியர் மடம், ருகலை], கிளாரு ஜோர்ச், மறிஸ்லெலா, அருட் சகோதரி எவறெஸ்ரா பிரான்சிஸ் [திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு], ஜெமி, காலஞ்சென்ற மரியதாஸ், போல் ஆகியோரின் மருமகனும், ரேய் [கனடா], பொஸ்கோ [கனடா] சாந்தன் [கனடா], அல்போன்சா மணி ஆகியோரின் பெறுமகனும், சூட்டி, டிசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 7. 6. 89 இன்று புதன் கிழமை காலை 9. 00 மணிக்கு ஊர்காவற்றுறை சேமக் காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஜெரோம்.
(மாக்கெற்)

அயித்தாம்புலம்,
கரம்பன் மேற்கு. (871)

## திருமதி புஸ்பரத்தினம் அரியரத்தினம்

திருமதி புஸ்பரத்தினம் அரியரத்தினம் 6-6-1989 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் S. அரியரத்தினத்தின் (முன்னாள் சிங்கர் மெஷின் ஏஜன்ட்) அன்பு மனைவியும், ரேய் [ஜேர்மனி], ரகுராஜ் [சுவிஸ்], செல்வானந்தம் [லங்கா சிமெந்து லிமிடெட், காங்கேசன்துறை], தேவரஜனி [மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 7-6-1989 இன்று புதன்கிழமை 3.00 மணியளவில் கொக்குவில் மிஷன் ஹவுஸில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

S. அரியரத்தினம்.

168, கே. கே. எஸ். ரோட்,
கொக்குவில். [11189]

## திருமதி. கந்தையா நல்லம்மா

திருமதி. கந்தையா நல்லம்மா காலமாகி விட்டார். இவர் காலம் சென்ற P. W. D. ஓவசியர் கந்தையாவின் அன்பு மனைவியும், P. W. D. ஓவசியர் திருவிளங்கம், திருமதி ரத்தினம் ஆகியோரின் சகோதரியும், காலம் சென்ற சோமசுந்தரம், தர்மலிங்கம், தியாகலிங்கம் (அவுஸ்திரேலியா], புனிதவதி ஆகியோரின் அன்புத்தாயாரும், பத்மநாதன், சந்திரவதனா, செல்வநாயகி ஆகியோரின் மாமியாரும், பத்மராஜ், பாமினி, ராதிகா, தாரணி, ரமேஸ் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 7 6-89இன்றுகாலை10 மணியளவில்மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்;

பத்மநாதன்.

மாக்கற் லேன்,
மானிப்பாய். (874)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் [illegible] இல் உள்ள அச்சகத்தில் 07—06—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org